இதழ் - 7
டிசம்பர் - 2025

கேலக்ஸியின் விண்மீன் மின்னிதழ்

“அனைவரையும் நம்பு; ஆனால் யாரையும் நம்பாதே”

நேர்காணல்: ஜி. ஏ. பிரபா

நிஸ்வாவின் நிழலில் நீரோடைகளின் கதை!!!

ISBN 978-81-994858-4-6
9 788199 485846

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

பதிப்பாளர்
பாலாஜி பாஸ்கரன்

ஆசிரியர்
பரிவை சே குமார்

இணை ஆசிரியர்
தேவதர்சினி நடராஜன்

வடிவமைப்பு
சென் பாலன்

Published by
Galaxy Book Sellers & Publishers

Print Partners
Printech, UAE

Travel Partner
FJ Tours & Travels, UAE

Galaxy Book sellers & Publishers
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-994858-4-6

தீர்ப்புகள்

இன்றைய சூழலில் பிரச்சினை எதுவாக இருந்தாலும் அதற்கான முடிவுகள் எல்லாமே உடனடியாக எடுக்கப்படுகின்றன. எதையும் தீர ஆராய்ந்து எடுப்பதில்லை, எடுக்க விடுவதில்லை. இது குடும்பங்களில் மட்டுமல்ல, அரசியல், சமூகம், இனம், மதம் என எல்லா இடத்திலும் இப்போது இப்படித்தான் இருக்கிறது.

எந்தப் பிரச்சினை என்றாலும் யாரால் பிரச்சினை, எதனால் பிரச்சினை, இதற்கான விதை யாரால் போடப்பட்டது, இந்தப் பிரச்சினையைத் தூண்டியவர் யார் என்பதை எல்லாம் நாம் தெரிந்துகொள்ள விரும்புவதில்லை. நமக்கு வேண்டியது அந்தப் பிரச்சினைக்கான முற்றுப்புள்ளி, நம்மைச் சார்ந்தோர் மனம் மகிழும் விதமாய் ஒரு தீர்ப்பு. பாதிக்கப்பட்டவன் எப்படியோ போகட்டும், அவனால் நமக்கு நயாப்பைசா பிரயோசனமில்லை. வென்றவன் மகிழட்டும் அவனே பின்னாட்களில் நமக்கானவன் என்பதுதான் இப்போதைய மனிதர்களின் மனநிலை.

எந்த ஒரு பிரச்சினைக்குமே அவசரத் தீர்ப்பை விரும்புவதைவிட, இந்தப் பிரச்சினையை ஆரம்பத்திலிருந்து பொறுமையாய், நிதானமாய் அலசி ஆராய்ந்தோம் என்றால் உண்மையில் யார் இதற்குக் காரணம், யார் பக்கம் தவறு என்பதைச் சரியாக நம்மால் கணிக்க முடியும். நமது தீர்ப்பும் மனநிறைவைக் கொடுக்கும். பாதிக்கப்பட்டவனும் வாழ்த்துவான். இப்பல்லாம் வாழ்த்துபவனை விட நம் தலைமுறை வாழ வழிவகை செய்பவனே தெய்வமாகிறான் இல்லையா..?

'12 Angry Man' ன்னு ஒரு படம். அதுல இளைஞன் ஒருத்தன் கொலை செய்ததாய் கைது செய்யப்பட்டிருப்பான். பார்த்த, சப்தம் கேட்ட, கத்தி விற்ற சாட்சிகள் எல்லாம் அவனுக்கு எதிராய் இருக்க, தீர்ப்பெழுதுவது மட்டுமே பாக்கி. அந்த வழக்கில் இறுதி அத்தியாயத்தை எழுத முன்பின் அறிமுகமில்லாத 12 ஜூரி உறுப்பினர்கள் ஒரு புழுக்கமான அறையில் அமர்ந்து, விவாதித்து ஒரு மணி நேரத்தில் அவன் குற்றவாளியா இல்லையான்னு முடிவெடுக்கணும். ஒருவனைத் தவிர மற்ற 11 பேரும் அவன் குற்றவாளின்னு எழுதி முடித்துவிட்டுப் போக நினைக்க, ஒருத்தன் மட்டும் இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு. பொறுமையா விவாதிக்கலாம், அதன் பின் முடிவெடுக்கலாம் என்று சொல்லுவான். அந்த அறைக்குள் காரசாரமான விவாதம், கோபப் பேச்சுக்கள், கண்ணீர் என ஒரு மணி நேரம் கரையும் போது 12 பேரும் அவன் குற்றவாளி இல்லை என்பதாய் தீர்ப்பு எழுதுவார்கள்.

அவ்வளவுதான்... பொறுமையாய் அலசி ஆராய்ந்து முடிவெடுங்கள் என்பதுதான் நமது விருப்பமாய் இருக்கிறது. காலம் அப்படிச் செய்ய விடுமா...? இல்லை நாம்தான் சார்பற்ற தீர்ப்பெழுத முன் வருவோமா..?

பரிவை சே குமார்

இதழில்....

சிறுகதை

நேசம் – அபு பர்ஹானா
இலக்கியன் – அப்புசிவா
ஓடுகாலன் – வசந்திமுனீஸ்
நெஞ்சம் மறப்பதில்லை – கார்த்திக் மாதையன்

நேர்காணல்:

‘அனைவரையும் நம்பு;
ஆனால் யாரையும் நம்பாதே’– ஜி. ஏ. பிரபா

கட்டுரை:

நிஸ்வாவின் நிழலில் (பகுதி – 5) – இளங்கோ ராமசாமி

புத்தகப் பார்வை:

தூப்புக்காரி – செ. இராசாராம்

கவிதை

மலடு – முகமூடி செழியன்
ஒரு மழைநாளும் தேவதையும் – புனிதா பார்த்திபன்

சினிமா:

களம்காவல் (மலையாளம்) – பரிவை சே.குமார்

நேசம்

அபு பர்ஹானா

"எல பீமா ! பாவநாசம் பஸ் போய்ட்டானு" கேட்டுட்டே வந்து சேரில் உட்கார்ந்தார் அப்பாஸ் பாய். "இல்லங்கா , இன்னும் வரல. இப்போ வர நேரந்தான். தூரமா போறியோ?".

"இந்நேரத்துல நான் எங்கல போவ போறேன் ? வெள்ளேனேயே எம்மொவன் சிவகாசிக்கு போனான். இன்னும் ஆள வரக்காணோம். அதான் ஒரு எட்டு பார்த்துட்டு போலாம்னு வந்தேம்ல...

"அவனென்ன சின்னப்பையனா? போனயிடத்துல முன்னப்பின்ன ஆயிருக்கும். வாடக்காத்து அடிக்குது . நீங்க வீட்டுக்கு போங்க. அவன் வருவான்".

"இல்லல பீமா ! இதுவரைக்கும் அவன் ஊர விட்டு எங்கேயுமே போனதில்ல. அதான் கொஞ்சம் பக்பக்னு இருக்கு".

"சரிங்க அப்பாஸ் பாய்... அப்போ உள்ள வந்து இருங்க..."

கையடக்க எப்.எம் ரேடியோவில் துரை கோபால் குரலோடு ஒலிபரப்பப்படும் மெல்லிசை பாடல்கள் இரவை மெதுவாக கடத்துகின்றன. ஆனால் அப்பாஸ் பாய்க்கு எதுவும் காதில் கேட்கவுமில்லை, கேட்கும் மனநிலையிலும் இல்லை...

"பீமா !! ஒரு சாயா போடேன்", சாயாவை வாங்கிட்டு சந்தை பஸ் ஸ்டாப்பை பார்த்துட்டே ஒரு நாற்காலியில உட்கார்ந்தார்.

டிப்ளமோ முடிச்சிட்டு ஒரு கம்பெனி இன்டர்வியூக்காக கல்லூரி நண்பர்களோடு சிவகாசி போயிருக்கான் இத்ரீஸ். மற்ற நண்பர்கள் முதல் சுற்றிலேயே தேர்வாகாமல் போக இவன் மட்டும் அடுத்தக் கட்டத்துக்கு தேர்வாகி விட்டான்.இதுவரை ஊர விட்டு எங்கேயும் தனியாக போனதில்லை. போகும் போது நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து போனதால் ஒன்றும் தெரியவில்லை.

இப்போது நண்பர்கள் எல்லாம் கிளம்பி போகவே ஊருக்கு தனியாகச் செல்ல வேண்டுமென்ற பயம் தொற்றிக் கொண்டது.

'மாப்ள ! நான் வர லேட்டாகும்னு எங்கூட்ட சொல்லிடுல'ன்னு நண்பனிடம் சேதி சொல்லி அனுப்பி விட்டு, அடுத்தக் கட்ட தேர்வுக்கு காத்திருக்கிறான்.

ஷோபா டெவலப்பர்ஸ்னு பெரிய கம்பெனி. ஆஸ்திரேலியா, துபாய்ன்னு நிறைய நாட்டுல ப்ரொஜெக்ட் நடக்குது. இப்போது தேர்வாகி விட்டால், வெளிநாட்டுக்கு போய் விடலாம்னு நினைச்சிட்டு இருந்தாலும் , மனசுக்குள்ள ஒரு பயம் இருக்கு.

மொத்தம் நாற்பது பேர். ஒவ்வொரு ஆளுக்கும் பத்து நிமிடமாகுது. நேரம் நேரம் செல்ல இத்ரீஸுக்கு பயமும் படபடப்பும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. அப்படி இப்படின்னு இண்டர்வியூ ரூமுக்குள்ள போகும் போது சாயந்திரம் ஏழு மணி. உள்ளே கோட் சூட் அணிந்த மூன்று பேர் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். முதல் இண்ட்ர்வியூ என்பதால் பயத்தில் உள்ளங்கை வேர்த்துக் கொண்டிருக்கிறது.



"ஹலோ மிஸ்டர் இத்ரீஸ்... உங்களைப் பற்றி அறிமுகம் செய்து கொள்ளுங்கள்... ப்ளீஸ்"

அவர்கள் ஆங்கிலத்தில் என்ன சொல்கிறார்கள் என்பது இத்ரீஸ்க்குப் புரிகிறது ஆனா இங்கிலீஷ்ல பதில் சொல்ல நினைக்கும் போது, 'உன்னை எண்ணிப் பார்க்கையில் கவிதைகொட்டுது. அதை எழுத நினைக்கையில் வார்த்தை முட்டுதுன்னு' அபிராமியிடம் சொல்லும் குணா கமல் மாதிரி வார்த்தை திக்குது.

தட்டு தடுமாறி Is , was , the போட்டு ஒரு வழியா பதில் சொல்லி விட்டான். பதினொன்னு, பனிரெண்டுல தேவராஜ் சார் சொல்லிக் கொடுத்த. இங்கிலீஷ் அன்னைக்கு தான் அவனுக்கு ஹெல்ப்பானது.

Pile foundation பத்தி சொல்லுங்கன்னு அடுத்த கேள்வி தமிழ்லயே கேக்குற அளவுக்கு அவனோட இங்கிலீஷ் இருந்துச்சு. அதுக்கு பதில் தெரியல... ஆனாலும் வேற எதையோ சொல்லி சமாளிச்சு முடிக்க , ஆட்டோகேட் படிச்சி இருக்கீங்களான்னு அடுத்த கேள்வி.

"இல்ல சார்... இனிதான் படிக்கணும். போன மாசம் தான் டிப்ளமோ முடிச்சேன்".

ஓகே மிஸ்டர் இத்ரீஸ்... இப்ப நீங்க போகலாம். தேர்வான விபரத்தை விரைவில் தங்களுக்குத் தெரிவிப்போம்"ன்னு சொல்லிட்டாங்க.

மத்தவங்களுக்கெல்லாம் பத்து நிமிசம் நடந்த இன்டர்வியூ இவனுக்கு மட்டும் ஐந்து நிமிசத்துல முடிஞ்சிட்டு. அதுவும் ஒரு வகையில நல்லதுக்கு தான்.

வெளியே வந்தவனுக்கு சரியான பசி. காலையில சிவகாசி பஸ் ஸ்டாண்டல மூனு இட்லி சாப்பிட்டது. மதியமும் சாப்பிடவில்லை. ஏற்கனவே தாமதமானதால், பஸ் ஸ்டாண்ட்ல போயி ஏதாவது சாப்ட்டுக்கலாம்னு அடிச்சி பிடிச்சி பஸ் ஸ்டாண்டுக்கு வந்துட்டான்.

பஸ் ஸ்டாண்ட் முழுவதும் அந்நியன் பட போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலிக்கு செல்லும் LSS பஸ் ஒன்று கிளம்ப தயாராக நிற்கிறது. இதனை விட்டால் அடுத்த பஸ் எப்போ வரும்னு தெரியாது. அதனால் அதுல ஏறிட்டான். ஜன்னலோர சீட்ல உட்கார்ந்த சிறிது நேரத்தில் , குலுக்கலோடும் சப்தத்தோடும் பஸ் கிளம்பி விட்டது. பசி அதிகமாகி ஏப்பம் ஏப்பமாக வருகிறது.

ஜன்னலோர இருக்கையின் வழியே முகத்தை தழுவும் காற்றும் , பேருந்தில் ஒலிக்கும் இசைஞானி இளையராஜாவின் பாடல்களும் பசி மறக்க வைத்து தூக்கத்தை தந்தன.

அன்னா இன்னான்னு பஸ் திருநவேலி வரும்போது பதினொன்னரை மணி ஆகி விட்டது. ஜங்சன் பஸ் ஸ்டாண்ட்ல இருந்து பாபநாசம் போற பஸ்ஸேறி ஊருக்கு பக்கத்துல வரும்போது தான் அவனுக்கு மூச்சே ஒழுங்கா வந்துச்சு.

சந்தை பஸ் ஸ்டாண்ட்ல இறங்கும் போது "எல பீமா ! எம்மொவன் வந்துட்டான்" என்ற வாப்பாவின் குரல் கேட்கிறது.

இத்ரீஸுக்கு ஒருபக்கம் வாப்பாவை பார்த்ததுல சந்தோசமும், இந்நேரத்துல வாப்பா இங்கே என்ன செய்றாருன்னு குழப்பம் வேற...

"இங்க என்ன செய்றியோ வாப்பா ? "

"இல்லல அப்பா... உன் கூட வந்த சங்காத்திமார்கள் எல்லோரும் ஊருக்கு வந்துட்டானுவோ. நீ மட்டும் வரல. அதான் ஒரு பயம்".

"நான் வர நேரமாகும்னு சொல்லி விட்டேனே... இம்ரான் வந்து சொல்லலியா..?"

"இல்லையே... சரில அப்பா.. இங்க வந்து உக்காரு. பீமா... நாலு ரொட்டியும் ஒரு சாயாவும் கொண்டுவா..."

ரொட்டியை தன் கையால் பிச்சிப்போட்டு சால்னாவை கொழுக்க கொழுக்க ஊத்தி , நல்ல விரவி , சாப்பிடுல அப்பான்னு சாயாவை குடிக்கிறார். தனக்கு பசிக்குதுனு வாப்பாக்கு எப்படி தெரியும்னு ஆச்சரியத்தோடு அவரை பார்த்துக்கொண்டே சாப்பிடுகிறான்.

"நீங்க சாப்பிடலியா வாப்பா"

"இல்லல... நான் அப்போவே சாப்டுட்டேன். அதனால பசிக்கல..."

அன்னைக்கு மட்டும் பீமா ஹோட்டலின் அந்த நாலு ரொட்டி ரொம்ப டேஸ்ட்டா இருந்துச்சு. அதுக்கு காரணம் பசியா இல்லை வாப்பாவின் கைவண்ணமான்னு இத்ரீஸ்க்கு தெரியவில்லை

"எல அப்பா ! உங்க வாப்பா ரொம்ப நேரமா பொலம்பிட்டே இருந்தாருல. உன்ன பார்த்த பொறவு தான் அவர் முகத்துல சிரிப்பு வருது"ன்னு ஹோட்டல் முதலாளி சொல்லும் பொழுது தான் அவனுக்கு உண்மை தெரியுது பத்து மணில இருந்து அங்கேயே வெய்ட் பண்ணிட்டு இருந்திருக்காரு.

வாப்பா எப்போவுமே இப்படி தான். ஐந்தாவது படிக்கையில் ஸ்கூலோடு திருவனந்தபுரம் டூர் போயிட்டு திரும்ப வரும் பள்ளியில் காத்திருந்து கூப்பிட்டு வந்ததிலிருந்து கடந்த மாசம் கல்லூரி நண்பர்களோடு குற்றாலத்துக்கு சர்வே எடுக்க போயிட்டு வரும் போது சந்தைக்கு வந்து கூட்டிட்டு போனது வரைக்கும் இது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சிறு வயதில் சைக்கிளின் கேரியரில் அமர்ந்து செல்கையில் வாப்பாவை இறுக அணைத்துக் கொண்டுச் செல்வது அவனுக்கு ரொம்ப பிடிக்கும். '
கவனமா உக்காருல அப்பா... கால உள்ளே விட்றாத'ன்னு அப்பப்போ சொல்லிட்டே வருவார். ஒரு வயதுக்கு மேல வாப்பாவோடு பேசுவதும் சைக்கிளில் போவதும் குறைந்தே போனது.

அது என்னவோ தெரியவில்லை , ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் அப்பா மீதான பாசத்தையும் இணக்கத்தையும் பெண் பிள்ளைகள் வெளிபடுத்துவது போல ஆண் பிள்ளைகளால் முடியவில்லை. நெஞ்சம் முழுக்க நிரம்பியிருக்கும் பாசத்தை வெளியே காட்ட முடியாமல் தவிக்கும் தவிப்பு ஆண்களுக்கு மட்டுமே கிடைத்த சாபம்.
வெகுநாட்களுக்கு பிறகு வாப்பாவின் சைக்கிளில் அவரின் தோள்பட்டையை பிடித்துக்கொண்டு பின்னாடி உக்கார்ந்து வீட்டுக்கு போகிறான். பத்து அடி தாண்டியதும், 'கால பார்த்து வச்சிக்கோல அப்பா... உள்ளே விட்றாத'ன்னு சொல்லும் வாப்பாவை ஆச்சரியமாக பார்த்து விட்டு , 'சரிங்க வாப்பா'ன்னு முகம் நிறைய புன்னகையோடு சொல்றான்.

வாப்பாக்கள் என்றும் மாறுவதில்லை.. எத்தனை வயதானாலும் அவர்கள் நம்மை குழந்தையாக தான் பார்க்கிறார்கள்.

"இன்டர்வியூ என்ன ஆச்சுல அப்பா"

"அனுபவம் வேணுமாம் வாப்பா"

"இப்போ தானே படிச்சி முடிச்சியிருக்கே ? அதுக்குள்ள முன் அனுபவம் எப்படி வரும். சரில அப்பா... ஒண்ணும் கவலைப்படாத, அடுத்த தடவை வேலை கிடைச்சிடும்" என்றபடி சைக்கிளை மிதித்தார்.

இத்ரீஸிற்கு அந்த நாலு பரோட்டா வாசமும் வாப்பாவின் நேசமும் மணந்துக் கொண்டே வருகிறது.

இலக்கியன்

அப்புசிவா

“இதுபோல தஸ்தயேவ்ஸ்கி வாழ்க்கையிலும் ஒரு நிகழ்ச்சி நடந்தது “என்றான் மகேந்திரன். அவனைச்சுற்றி எப்போதும் போல குழுமியிருந்தனர் நண்பர்கள். நான் ஒரு ஓரமாக அவன் சொல்வதை கேட்டுக்கொண்டு எப்போதும்போல் செல்லை நோண்டிக்கொண்டிருந்தேன்.

மகேந்திரனின் வசீகரம் அவனது பேச்சு. அவன் பேச ஆரம்பித்தால் நாள் முழுதும் கேட்டுக்கொண்டிருக்கலாம். கல்லூரியின் மிக பெரும் நேரம் அவன் படிப்பது உலக இலக்கியங்கள் மட்டுமே. ஆனால் அனைத்து பாடங்களிலும் தவறாது முதலிடம் வருவான். நாங்கள் படிப்பது பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி. துணைப்பாடமாக பிஸிக்ஸ், மேத்ஸ் உண்டு. எனக்கு மூன்றுமே அலர்ஜி. தேர்வுக்கு முதல் நாள் என் பிட்டு தயாரிக்கும் முறைகளை பார்த்தால் ஒரு தனி சினிமாவே எடுக்கலாம். ஆனால் இந்த மகேந்திரன் என்ன செய்கிறான், ஏது என்றே தெரியவில்லை. கதைப்புத்தகங்களாக மேய்ந்துவிட்டு, தேர்வில் கலக்கிவிடுவான்.

“படிப்பதை கடமையாக செய்கிறீர்கள் தோழர்... மனசு சுத்தமா வைங்க... தெளிவான மனசில எந்த பாடமா இருந்தாலும் அப்படியே வந்து உட்காரும். மனசு சுத்தமா தெளிவா வைக்க உலக இலக்கியம் நெறயா படிங்க...” என்பான்.

அவன் வீட்டில் ஒருநாள் பார்த்தேன். ஒரு அலமாரி நிறைய குண்டு குண்டாய் புத்தகங்கள். அதில் ராஸலீலா என்றொரு புத்தகம் பார்த்துவிட்டு,
“டேய் மகி... இத படிச்சா மனசு தெளிவாவுமாடா...” என்றேன்.

அவன் என்னைப்பார்த்து மௌனப்புன்னகையுடன் கூறினான்.

“இலக்கியமா படிச்சா சுத்தமாவும்.”

அதன்பின் அந்த புத்தகத்தை படித்துவிட்டு, ஒருவாரம் பிரமை பிடித்தார்போல் நான் அலைந்தது வேறுவிஷயம்.

நாங்கள் மட்டுமல்ல, சில பேராசிரியர்களும் அவனுடன் சரிக்குசரி இலக்கிய விவாதங்களில் ஈடுபடுவதை பார்க்கும்போது கண்டிப்பாக அவன் மிகப்பெரும் மேதையாக இருப்பதையும், அவன் என் பக்கத்து தெரு நண்பன் என்பதையும் நான் பெருமையாக சொல்லிக்கொள்வேன்.

அவன் படிக்கும் முறையை காப்பியடிக்கும் ஒரு கூட்டமே உண்டு. அதாவது இலக்கிய புத்தகங்களை.

“அவன் படிக்கற எழுத்தாளர் பேர் எல்லாத்திலயும் ஃ ன்ற எழுத்து வரும் தெரியமா...” என்பான் பாபு. அதற்கு ஏற்றார்போல் அன்றைய தினம் காஃப்கா, போஃல்கா என்று ஏதாவது பெயர் போட்ட புத்தகம் வைத்திருப்பதை கண் ஜாடையில் காட்டுவான்.

இதற்கு மாற்றாக குமார், “இஸ்கி... புஸ்கி... இதுபோல புத்தகம் எக்ஸாம் டைம்ல படிப்பான்” என்பான். ஆனால் எனக்கு அவனிடம் மிகப்பிடித்த விஷயம் அவனது பொறுமை. ஒருதடவை பஸ்ஸில் வரும்போது, டிக்கெட் எடுக்க மறந்து படித்துக்கொண்டு வந்தான். நானும் கவனிக்கவில்லை.

இறங்கும் சமயம் ஞாபகம் வந்து கண்டக்டரிடம் டிக்கெட் கேட்டான். ஏதோ கொலைவெறி மூடில் இருந்த அரசு பஸ் கண்டக்டர், “ஏண்டா... சாவுகிராக்கி... செக்கிங் வந்தா நாந்தாண்டா பதில் சொல்லணும்... உயிரை வாங்கவே வறீங்களாடா...” என்று கத்தியவாறு டிக்கெட் கொடுத்தார்.

“அந்தாள்தான் கவனிக்கல இல்ல... இறங்கபோறப்ப எதுக்கு டிக்கெட் எடுத்து திட்டு வாங்கற...” என்றேன்.

அவன் முகத்தில் சிரிப்பு மாறாமல், “அவர் கடமையை அவரும், என் கடமையை நானும் செய்யணும் இல்லையா...” என்றான். புத்தருக்கு பொறந்த பயல்.

பழனிவேல் மட்டும் தெளிவான ஒரு முடிவில் இருந்தான். பக்கத்து தெரு, கூடவே வரும் நண்பனாக இருந்தாலும் என்னைவிட பழனிவேல் அவனுடன் மிக நெருக்கமாக கூடவே சுற்றுவான். முக்கியமாக இலக்கிய அட்வைஸ்களின்போது. ஒருநாள் அதன் ரகசியத்தை உடைத்தான்.

“மாப்ள... கவனிச்சு பார்... இந்த பொண்டுங்க எல்லாம்... யாரை சுத்திசுத்தி வருது.”

“ஏண்டா... நம்ம க்ளாஸ் பொண்ணுங்க எல்லாம் நல்ல டைப்புடா...”

“அடேய்... நான் என்னா சரியில்லன்னா சொல்றேன்... ஆனா பாரு மாப்ள... இந்த மகிய சுத்தி இருக்கற பொண்ணுங்க கூட்டம் நமக்கு எப்பயாவது வருதா... அவன் பேசறத கவனிக்கறதென்ன.... அவனுக்கு டிஃபன் கொண்டு வந்து கொடுக்கறதென்ன... அடாஅடா...”

“டேய்... படுபாவி...அவன் நெருப்புடா...”

“அவன் நெருப்புதான்... இருக்கட்டும்... நான் ஈ மாப்ள... ஈ எங்க சுத்தும்...? இனிப்பு இருக்கற எடம் ஈ சுத்தும்... அதான் அவனோடயே சுத்தறேன்....”

“போட்டாங்.... வெட்கங்கெட்டவனே...”

“தாங்க்ஸ்... மாப்ள...” என்றான் பழனிவேல். ஆனால் சில நாட்களாக பழனிவேல் மகேந்திரனுடன் சுற்றுவதை குறைத்துக்கொண்டான். அவனை கவனித்தபோது அவன், தற்போது புதிதாக வந்து சேர்ந்திருக்கும் வெங்கடேஷ் என்பவனுடன் சேர்ந்து சுற்றுவதை கவனித்தேன். அவனை விசாரிக்கும்போது,

“இனிப்பு இடம் மாறிடுச்சு மாப்ள...” என்றான்.

வெங்கடேஷ் தற்போதுதான் வேறு ஊரிலிருந்து வந்து கல்லூரியில் எங்கள் வகுப்பில் இணைந்தவன். அசப்பில், ஆர்யா போல தோற்றமளிப்பவன். கிரிக்கெட்டில் மிக ஆர்வமான அவனுக்கு கெமிஸ்ட்ரி ஃபுரபஸர் மெய்ஞான மூர்த்தி, கவாஸ்கர் என்ற செல்லப்பெயர்கூட வைத்தது ஞாபகம் வந்தது.

வெங்கடேஷ், மகிக்கு நேர் எதிர் குணம் கொண்டவனாக இருந்தான். அவன் இலக்கியம் பேசினால், இவன் உள்ளூர் சினிவாவை பிளந்து கட்டுவான். அவன் அளந்துஅளந்து அளவாக அழகாக பேசுவான். ஆனால் இவனோ தண்ணிலாரியைக் கண்ட கும்பல் கத்திக்கொண்டு ஓடுவதைப்போல திறந்த வாயை மூட மாட்டான். மகி, பாடங்களைப்பற்றி பேசவே மாட்டான். வெங்கடேஷ் உட்காரும் இடம் தோறும் மற்றவர்களுக்கு டியூஷன் எடுத்துக்கொண்டே இருப்பான். ஆனால், சுற்றியிருந்த கும்பல் மகேந்திரனை விட்டு, இவன்புறம் சாய்ந்ததை என்னால் கணிக்கவே முடியவில்லை.

அந்த மாத மாடல் எக்ஸாமில் அந்த அதிசயம் நடந்தது. வெங்கடேஷ் அனைத்து பாடங்களிலும் முதலாவதாக வந்து ஆச்சரியப்படுத்தினான்.

மகேந்திரன் முதல் ஆளாக வந்து, வெங்கடேஷ்க்கு கை கொடுத்து பாராட்டினான்.

“என்னா ப்ரோ... நான் வந்து சேர்ந்து மூணுமாசமாச்சு... இன்னிக்குதான் நான் கண்ணுக்கு தெரியறேன்... ல்ல...” என்றான் வெங்கடேஷ். எப்போதும் போல மெல்லிய புன்னகையை சிந்திய மகேந்திரன்,

“எது எப்போ நடக்குமோ, அது அந்த சமயம் கண்டிப்பா நடக்கும் நண்பா....” என்றான்.

அதன்பின் அவர்கள் அடிக்கடி, சந்தித்து பேசுவதை கண்டேன். பெரும்பாலான சமயங்களில், தீவிர இலக்கியங்களைப்பற்றி, மகி பேசுவதையும், அதற்கு ஆப்போசிட்டாக வெங்கடேஷ் கமெண்ட் அடிப்பதையும் கவனித்திருக்கிறேன்.

ஒரு இரண்டுமாதம் போயிருக்கும். ஒருநாள் மதிய உணவு இடைவேளையின் போதுதான் அந்த சம்பவம் நடந்தது. எப்போதும் போலதான் அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

“அப்போ இலக்கியம் படிச்சாதான் அறிவு வளரும்றயா ப்ரோ...?” என்றான் வெங்கடேஷ்.

“அறிவு வளர்வது இல்லப்பா.... அது நமக்குள்ளதான் இருக்கு... அதை அடையாளம் காட்ட இலக்கியம் ஒரு விளக்கு.. ” என்றான் மகேந்திரன்.

“எனக்கு அந்த விளக்கு வேண்டாம்பா... ஒரு டார்ச்லைட் எடுத்துக்கறேன்... அட ஒரு சீமெண்ணெய் விளக்கே எடுத்துக்கறேன்...”

“நீ கேலியா கேட்டாலும், எனக்கு சிரிப்புதான் வருது. நான் ஒரு அடையாளத்துக்கு விளக்குண்ணேன்... ஒரு வழிகாட்டின்னு வச்சுக்கோ.. ”

“அட புரியுதுப்பா... நானும் அடையாளத்துக்குதான் சொன்னேன். வெளியூர் விளக்கு மட்டுமில்ல... நம்மூர்லயும் இருக்குண்ணேன்... ”

இவர்கள், இருவரின் உரையாடல் மிக சுவராசியமாக போய்க்கொண்டிருக்க, அதைக்கேட்க கூடுபவர் அதிகமாயினர். சில பேராசிரியர்களும் சுற்றிவந்து உட்கார்ந்துகொண்டனர். அப்போதுதான் நான் ஒருவிஷயத்தை கவனித்தேன். இருவருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை, எப்போதும் கோபப்படாத தன்மை. புடம் போட்ட தங்கம் போல சிரித்தமுகம். இதுதான் இவர்களின் வெற்றியின் அடையாளமாக என் மனதில் பட்டது.

“நம்மூர்ல இருக்கறது, போலச்செய்தல்... அதாவது... மார்க்கேஸ்ஸை காப்பியடிச்சு போலச்செய்தல்... உண்மையான கட்டுடைத்தல் இங்கே சாத்தியமில்லை...” என்றான் மகேந்திரன்.

“சரிதான்... இலக்கியம்னா.... தெளிவா சொல்லு... மக்களின் மேல உண்மையான அக்கறை நம்மூர்ல யாருக்கும் இல்லன்றியா...” என்றான் வெங்கடேஷ்.

“மக்களின் மேல் அக்கறை வேற... தீவிர இலக்கியம் தளமே வேற நண்பா...”

“அட நம்ம பெரியார எடுத்துக்கோயேன்... அவர் உடைக்காத கட்டா... அவர் சொன்னத எல்லாம், கொஞ்சம் கற்பனை கலந்து கதையா அடிச்சுவுடு பாக்கலாம்... உலக இலக்கியமெல்லாம் பிச்சை வாங்கணும்...”

“இல்ல... நீ அரசியல் பேசறே.... அதுக்கு நான் வர்ல....”

“அரசியல் கலக்காம என்ன கூந்தலுக்கு இலக்கியம்.... நீ உண்மையா உலக இலக்கியம் படிச்சா அரசியல் இல்லாம இருக்காது பாத்துக்கோ... ஆனா நீ ஒரு பம்மாத்துக்குக்கு ரீல் அடிக்கறேன்றேன்... ”

“தனிப்பட்ட விமர்சனம் வேணாமே வெங்கடேஷ்....” என்ற மகியின் முகம் சற்று சிவந்துதான் போனது.

“ஆமாமா… உலக இலக்கியம் படிச்சா தெளிவாவேன்னு எல்லாருக்கும் அட்வைஸ் பண்ணிட்டு… மத்தவன் பாடம் படிக்கறத கெடுத்து… நீ வீட்டுக்கு போய் மாங்குமாங்குன்னு உருபோடறதையும், வாரம் ரெண்டு நாள் வெளியூர் டியூஷன் போறதையும் கூட சொல்லக்கூடாதுதான்… ” என்று வெங்ககடேஷ் சொல்ல…. எங்கிருந்துதான் மகேந்திரனுக்கு கோபம் வந்ததோ… சடாரென்று எழுந்தவன்… தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை தன் தலை உயரத்திற்கு தூக்கி, பொட்டென்று போட்டான். அவன் கைகள் நடுங்குவதை முதல் தடவையாக பார்த்தேன்.

“ஹேய்… ப்ரோ…. குற்றமும் தண்டனையும் நாவல்ல… இது மாதிரியே….” என்று வெங்கடேஷ் சொல்லிக்கொண்டிருக்க…

சட்டென்று திரும்பி வெளியேறினான் மகேந்திரன்.

ஓடுகாலன்

வசந்திமுனீஸ்

அதிகாலை நான்கு மணிக்கு பம்பாயிலிருந்து மே மாதம் கோடை விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்த இளங்கோவனின் தங்கச்சிகளும், மருமகப் பிள்ளைகளும், மாப்பிள்ளைமார்களும் அசதியில் உறங்கிக்கொண்டிருந்தனர்.

இளங்கோவன் பனங்காட்டுக்குப் போய் இட்லி நாடாரிடம் காலையில் குடிப்பதற்கு பெரிய தூக்குவாளி நிறைய சுண்ணாம்பு பதனியை வாங்கிக் கொண்டு, மாலையில் தன் மாப்பிள்ளைமார்கள் குடிக்க 'கள்' பதனிக்கும் அட்வான்ஸ் பணம் கொடுத்துவிட்டு, பனையோலையில் பட்டை பிடித்து அவரும் வயிறு முட்ட பதனியைக் குடித்துவிட்டு தூக்குவாளியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

இளங்கோவன் வேலைக்குப் போனயிடத்தில் வேட்டிக்குள் மறைத்துக்கொண்டு வந்த மூன்று செந்தூரம் மாம்பழங்களை நீள நீளமாய் வெட்டி பதனிக்குள் போட்டதும், ஒரு விதமான நறுமணம் வீடெங்கும் வீசத் தொடங்கியது. அந்த மணம் நல்லா உறங்கிக்கொண்டிருந்தவர்களின் நாசிக்குள்ளிறங்கி அவர்களை உசுப்பிவிட்டது. அனைவரும் எழுந்து அவசரமாய் பல் துலக்கி ஆளுக்கொரு சொம்பு குடித்தனர். அவரின் மருமகப்பிள்ளைகள் மாம்பழத் துண்டுகளை 'உச்சிக்கொட்டியும் நாக்கைச் சொட்டப்போட்டும்' தின்றனர்.

விருந்தினருக்காக முதல்நாள் ராத்திரியிலயே மூங்கில் கோழிக்கூடைக்குள் அடைக்கப்பட்ட இரண்டு வெடக்கோழிகளை இளங்கோவன் மனைவி பிடித்துக்கொண்டு வீட்டின் பின்புறம் நிற்கும் பூவரச மரத்தடியில் றெக்கைகளை ஒன்றோடொன்று பின்னி கோழிகளை தரையில் போட்டுவிட்டு, "யோவ்! சீக்கிரம் கோழிய வெட்டித்தாரும். நா இட்லி அவிக்கிறேன்" என்றாள்.

இளங்கோவன் உஜாலா போட்ட வெள்ளைச் சட்டையைக் கழற்றி மரக்கிளையில் தொங்கவிட்டு விட்டு, அசையில் கிடந்த வாழைக்கறை படிந்த 'அரசன் சோப்' கை பனியனையெடுத்துப் போட்டுக்கொண்டு கடலை மூடினைப் பிடுங்கி கொத்தாய்க் கடலையைத் திருகுவதுபோல் கோழித் தலைகளைத் திருகினார். கோழிகள் 'கொக்'கென சிறு சத்தமெழுப்பி தலையைத் தொங்கப்போட்டன.

பனையோலைகளை அள்ளிக்கொண்டு வந்து தீமூட்டி கோழிகளைத் தலைகீழாய் மயிர்கள் கருகும்வரை மாற்றி மாற்றிப் பிடித்து தீயில் வாட்டியெடுத்து, சூட்டோடு சூட்டாய் கால்களின் தோல்களை உருவியெடுத்து, உடம்பில் ஒட்டியிருந்த கருகிய மயிர்களையெல்லாம் கருவாலிகள் கரையான்கள் தின்பதுபோல் வேகமாய்ப் பிடுங்கிச் சுத்தம் செய்து, கட்டையில் வைத்து கறியை வெட்டருவாளால் வெட்டத் தொடங்கியவர். தன்னருகே நின்ற தன் மூத்த தங்கச்சியின் இளைய மகளிடம், "தங்கக்கட்டி, அத்தக்கிட்டப் போயி கறிக் கழுவ பாத்திரம் வாங்கிட்டு வாம்மா" என்றார்.

கோழிக்குஞ்சுவைப்போல் குடுகுடுவென ஓடிப்போய் சருவச்சட்டியை எடுத்து வந்தவள், வெட்டிய கறிகளில் கிடந்த சிறிய ஆரஞ்சு நிற உருண்டைகளைப் பார்த்து, "மாமா கோழி தேன் மிட்டாய்லாம் சாப்பிட்டுருக்குப் பாருங்க" என்றாள்.

இளங்கோவன் கல்லில் தீட்டிய கத்தியைப்போல் பளிச்சென்று சிரித்து, "இது தேனு முட்டாயி இல்ல தங்கம், கோழி முட்ட" என்றார். "மாமா கோழி முட்ட ஒயிட்டுலா! இந்தக் கலருலய்யா இருக்கும்" என்றவளிடம், "முட்ட மொதல்ல இப்படித்தான் இருக்கும். நாளாவ நாளாவ வெள்ளத்தோடு வளந்து வயித்துக்குள்ளருந்து வெள்ளக்கலரா வெளிய வரும்" என்று சொல்லிக் கொண்டே சட்டியில் கறியை அள்ளிப்போட்டுக் கழுவி மருமகப் பிள்ளையிடம் கொடுத்தார். அவள் கறியில் கிடந்த ஆரஞ்சு நிற முட்டைக் கருக்களை மெல்ல அமுக்கிப் பார்த்தபடியே அடுப்படியிலிருந்த அத்தையிடம் போய்க் கொடுத்தாள்

இளங்கோவன் மனைவி அம்மியில் அரைத்த மசாலாவோடு கறியை சேர்த்து கொதிக்க வைத்ததும் கோழிக்கறி வாசம் தெருப்பூராம் மணத்தது. மாட்டைப் பத்திக்கொண்டு தெருவில் போன மாரியம்மாள், " ஓ மைனியோ...! பம்பாயிலிருந்து ஆளுவ வந்தாச்சி போலிய. கறிக்கொழம்பு வாசம் காத்துல கமகமக்குதும்மா!" என்றாள்.

"எ பலவட்ர முண்ட, கொதிகிதி போட்றாத. மாடு மேய்ச்சிட்டு வந்து கொழம்பெடுத்துட்டுப் போ!" என்று இளங்கோவன் மனைவி சொன்னதும் மாட்டு மணியைப்போல் சிரித்து மாடுகளை ஓட்டினாள் மாரியம்மாள்.

கொதித்து வெந்த கோழிக்குழம்பினை அகப்பையில் கோரி இளங்கோவன் கையில் கொஞ்சமாய் ருசி பார்க்க ஊற்றினாள் அவரின் மனைவி. குழம்பை உறிஞ்சிக் குடித்துவிட்டு, "ஒரப்பெல்லாம் சரியா இருக்கு! உப்பு தான் கொஞ்சம் கம்மி. ரெண்டு உப்புப்போட்டு ஒரு கிண்டு கிண்டி எறக்கீரு போது"மென்று மனைவிடம் சொல்லிவிட்டு, மாப்பிள்ளைகளுக்கும் ருசிப்பார்க்க கிண்ணத்தில் கறியைக் கோரிக்கொண்டு போய்க் கொடுத்தார். அவரின் மாப்பிள்ளைகள் அவருக்கு சூட்கேஸிலிருந்து வெள்ளையனை எடுத்துக் கொடுத்தனர். அவர்கள் மொழியில் 'வெள்ளையன்' என்றால் பட்டச்சாராயம். வெள்ளையன் மூடியை கோழித்தலையைத் திருகியதுபோல் திருகி மோந்துப் பார்த்த இளங்கோவன், "நம்மூரு வெள்ளையனக் குடிச்சிட்டுத் தெக்குத் தெருவுல வந்தோம்ன்னா... வடக்குத் தெருக்காரி வாயாலயெடுத்துருவா! நாத்தம் அப்பிடி கொடலப்புடுங்கும். ஆனா, பம்பாயி வெள்ளையன் சும்மா கும்பாட்டக்காரி பூசுற பவுடர்மாறி கும்முன்னு இருக்குவோய்..!" என்று பாட்டிலில் பாதியை காலிசெய்து ஆவிப்பறக்க கோழிக்கறியை அள்ளி வாயில் போட்டு, ஆகா! "வெள்ளையன்னா பம்பாய் வெள்ளையந்தான் மாப்ள" என்றார்.

"வெள்ளனயே 'வெள்ளையன்' உள்ள போயிட்டாம்லா! இன்னைக்கிப் பூராம் ஒங்க மச்சான் குளிக்காம, கொள்ளாம ஒரே வீர வசனம் பேசிட்டுத்தான் திரிவாரு... நீங்க குளிச்சிட்டு சாப்பிடுங்க. தொட்டியில தண்ணிப்புடிச்சி வச்சிருக்கேன்" என்றாள் இளங்கோவன் மனைவி.

"என்னது தொட்டித் தண்ணியிலக் குளிக்கனும்மா? குளத்துலத் தண்ணி தெப்பு தெப்புன்னு கெடக்குது! நல்ல அலறக் குளிச்சிட்டு வரலா"மென்றார் இளங்கோவன்.

"கோடையில கொளத்துலத் தண்ணிக் கெடக்கா! எக்கோவ்... மச்சானுக்கு வெள்ளையன் வேலச் செய்ய ஆரம்பிச்சிட்டான்" என்றனர் மாப்பிள்ளைமார்கள் இருவரும்.

"தம்பியளா! அவரு சொல்றது நெசந்தான். நாந்தான் மறந்துட்டேன். போன வாரத்துக்கு முந்துன வாரம் வெள்ளிக்கெழமக் காலங்காத்தால புடிச்ச மழ மறுநாளு காத்தால வரைக்கும் கொளுத்து கொளுத்துன்னு கொளுத்தியெடுத்ததுல, கொளம் மேவி மறுவாலு விழுந்துடுச்சி. அப்பிடியொரு பேய் மழ!" இளங்கோவன் மனைவி சொன்னதும்... பம்பாய் ஊர்ல ஒரு பக்கெட்டுத் தண்ணியில் அழுக்கும் அசதியும் போகாமல் அரக்கப்பரக்க குளித்துவிட்டு வேலைக்கு ஓடியவர்கள், ஆளுக்கொரு தேங்காப்பூத் துண்டையெடுத்துக்கொண்டு முற்றத்தில் நின்ற வேப்பமரத்தில் வேப்பங்குச்சியை முறித்து கடித்தபடி குளத்தைப் பார்த்து குளிப்பதற்கு குதிப்போட்டு இளங்கோவன் பின்னால் ஓடினர்.

வயிறு பெருத்த கர்ப்பிணிப் பெண்போல் தண்ணீர்ப் பெருகி குளம் கடல்போல் காட்சியளித்தது; கரையில் ஆவாரம்பூவும் காட்டுமல்லியும் அழகழாய்ப் பூத்துக் கிடந்தன; செங்கா நாரைகள் தன் நீள மூக்கினை குளத்து நீரிலிட்டு சல்லடை போட்டு இரையைத் தேடிக்கொண்டிருந்தன; வானில் கார்மேகங்களைப்போல குளத்தில் நீர்காகங்கள் கூட்டமாய் நீந்திக் கொண்டிருந்தன; பெண்கள் குளிக்குமிடத்திலுள்ள ஆலமர விழுதுகளில் அம்மணமாய் சிறுவர்கள் ஊஞ்சலாடியபடி குளத்தில் குதித்து கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர். மஞ்சள் பூசும் பெண்களைக் கண்டு பகலிலேயே தவளைகள் இனப்பெருக்கக் காலக் குரலை இடைவிடாது எழுப்பிக் கொண்டிருந்தன; கெண்டையும் கெளுரும் பெண்களின் கால் கடித்த போதையில் கரையில் தள்ளாடியபடி நீந்தின; ஆலமரத்தின் மறைவில் உடைமாற்றும் பெண்களைக் கண்டு உச்சானிக் கொப்பிலிருந்த ஆண் கிளிகளும் ஆண் மைனாக்களும் பழங்கொத்த மறந்தன. ஆண்கள் குளிக்குமிடத்தில் பறவைகளில்லை; நாரைகளில்லை. பாவம்...! சதுரவடிவ சலவைக்கல். மூர்க்கமான முதியவரிடம் மூஞ்சி முகரையெல்லாம் அழுக்கு வேட்டியால் அடி வாங்கிக்கொண்டியிருந்தது.

பால்போல பெருகிக் கிடந்த குளத்துத் தண்ணீரைப் பார்த்ததும் இளங்கோவனும் அவனின் மாப்பிள்ளைமார்களும் பால்யகாலத்துக்குள் விழுந்தனர். கண்ணாடித் தம்ளரில் நுரை பொங்க டீ ஆத்தித் தரும் டீ மாஸ்டரைப்போல் வெயில் சூடாக்கிய குளத்துநீரை ஆத்தி ஆத்தி கரையில் நுரை சேர்க்கும் அலைகள்மீது சிறு சப்பைக் கல்லையெடுத்து பெரும் வேகத்துடன் எறிந்தனர். முதல் மாப்பிள்ளையின் சப்பைக்கல் இரண்டு முறையும், இரண்டாவது மாப்பிள்ளையின் கல் மூன்று முறையும் துள்ளியோடும் விட்டில் பூச்சிப்போல் அலைகளில் துள்ளி தண்ணீரில் மறைந்துக் கொண்டது. “ யே... எங்கல்லுந்தான் மூட்டயடிச்சது. ஓங்கல்லு ரெட்ட” என்று ஒருவருக்கொருவர் சிறுவர்களைப்போல் செல்லமாய் சண்டையிட்டு, தரையில் கால்படாமல் கரையில் துள்ளிக் குதித்தனர்.

முதல் மாப்பிள்ளை சப்பைக்கல்லையெடுத்து இளங்கோவனிடம் கொடுத்து, “மச்சான்! நீங்க எறிங்க. ஓங்கக் கல்லு எத்தன அடிக்கிதுன்னு பாப்பு”மென்றான். இளங்கோவன் கல்லை வாங்கிக்கொண்டு, கையை பின்னாலிழுத்து வேகமாய் எறிந்தார். கல் அலைகளில் ஆறுமுறை கர்ணமடித்ததைப் பார்த்து அதிசயித்த மாப்பிள்ளைமார்கள், மச்சானை மார்புக்கு மேல் தூக்கிப் பாராட்டினர்.

இளங்கோவன் சிரித்தபடி, “பின்ன சின்னவயசுல கொளத்துல, கெணத்துல கண்ணு செவக்க செவக்க என்னா ஆட்டம் போட்டுருக்கோம். அதெல்லாம் கண்ண மூடுறவரைக்கும் ஒண்ணும் மறக்காது!” என்று கண்ணை மூடி குளத்திற்குள் முங்கியவர் கால்மணி நேரமாகியும் எழுந்திருக்கவில்லை; மாப்பிள்ளைகள் இருவரின் கண்ணுக்கும் தென்படவேயில்லை. கரையிலிருந்தவர்கள் காணாமல் போனவரைத்தேடி தண்ணீருக்குள் அவர் முங்கியயிடத்தில் முங்கி முங்கிப் பார்த்தனர். கண்ணுக்கெட்டும் தூரம்வரை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, “ மச்சான்! மச்சான்! “ என இக்கரையிலிருந்து அக்கரைக்குக் கேட்கும்படி கதறினர்.

இருவரின் கதறலில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுமாடுகள் தலைதூக்கிப் பார்த்து ‘ம்... மா...’ என்றது. நீர்காகங்களும் நீளலகு கொண்ட நாரைகளும் ‘கியாவ் கியா’வென குளத்தைவிட்டு கூட்டம் கூட்டமாய் பறந்துப் போயின. குளத்தில் ஒரு சுடுகுஞ்சியைக் கூட காணோம். இருவரும் செய்வதறியாமல் திகைத்து, கண்ணீருடன் எழுந்து, கவலையோடு கரைக்கு விரைந்தனர். அவிழ்த்து வைத்த ஆடைகளை ஈரத்தோடு கட்டிக்கொண்டு, கரைமேல் ஏறி நின்று அக்கம்பக்கம் ஆடுமாடு மேய்ப்பவர்களை கத்திக் கூப்பிட்டனர். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த நம்பி, ஆட்டின் கொம்பின் மேல் பறந்து பறந்து உக்காரும் தும்பிபோல பறந்தோடி வந்தார்.

“அண்ணே! எங்க மச்சான் கொளத்துல முங்கி அரைமணி நேரத்திற்கு மேலாச்சு. ஆளக்காணும். ஏறங்கிக் கொஞ்சம் என்னன்னு பாருங்க; எங்க மச்சான காப்பாத்துங்கண்ண” இருவரும் நம்பியிடம் குழவிக் கொட்டிய ஆட்டைப்போல் கதறினர்.

“என்னப்பா நீங்க ஆள் வளந்தளவுக்கு அறிவு வளரலயே. தெரியாத ஊருல இப்பிடி தெரியாத்தனமா குளிக்கலாமா? இது மோசமான கொளம் லா. எத்தனப்பேர காவு வாங்கிருக்கு! உள்ளூருக்காரங்க யாருட்டயாவது கேக்கக்கூடாதா. இப்படி கேக்காமக் கொள்ளாமக் குளிச்சி, வம்பா ஒரு ஊசுர பறிகொடுத்திட்டியளப்பா!” நம்பி சொன்னதும், “அண்ணே எங்களுக்குத்தான் வெளியூரு. எங்க மச்சானுக்கு இந்த ஊரு தான். பேரு எளங்கோவன்” - குன்னிமுத்துப்போல் கருவிழியைத் தவிர வெள்ளை விழியெல்லாம் இரத்தமாய் சிவக்க அழுதபடி சொன்னார்கள்.

“ஏ என்னப்பா சொல்றிய... எளங்கோ மாப்பிள்ளையளா நீங்க?”

“ஆமாங்கண்ணே”

“காலங்காத்தாலயே ஒங்க மச்சானுக்கு ‘வெள்ளையன் ’ எதும் குடுத்தீயளா?!”

“முழுப் பாட்டுலுக் குடுத்தோம். அரப் பாட்டுலுக் குடிச்சிட்டாரு.”

“பாவிமனுசன் அதான் போதக் கெறக்கத்துல பழசலாம் மறந்து இப்படி புத்திக்கெட்டு போய்ச்சேந்துட்டான்!“ தொரட்டிக் கம்பையும், தூக்குச் சட்டியையும் கீழே வைத்துவிட்டு, கட்டியிருந்தகைலியில் கண்ணீரைத் துடைத்தார் நம்பி.

“அண்ணே கொஞ்சம் கொளத்துலறங்கிப் பாருங்க. தயவுசெஞ்சி எங்க மச்சான செத்துட்டாருன்னு மட்டும் சொல்லாதீங்க. “ மீண்டும் அழத்தொடங்கினர்.

“தம்பியளா வெளியூருக்காரனா இருந்தா இந்நேரம் நீங்க சொல்றதுக்கு முன்னே கொளத்துல ஏறங்கியிருப்பேன். ஆனா, எளங்கோ இந்தக் கொளத்தப்பத்தி நல்..லா தெரிஞ்ச உள்ளூருக்காரன். அதுமட்டுமில்லாம அம்பதடி கெசமுள்ள கெணத்துல வுழுந்த பொருள அஞ்சே நிமுசத்துல எடுத்துட்டு வந்துருவான். அப்படியாப்பட்ட நீச்சல்காரங் இந்த இடுப்பளவுத் தண்ணில முங்கிட்டு இன்னமும் வெளிவரலன்னா... இது அவ வேல தான். “

“யாருண்ணே அவ?” குளிரிலும் பயத்திலும் நடுங்கியபடி கேட்டனர்.

“அவ பேரு... ரெண்டு புருசங்காரி. அவ செத்து பத்து பதினைஞ்சி வருசமிருக்கும். அவளுக்கு அந்த விசியத்துல மத்த பொம்பளயளவிட ஆர்வம் ஜாஸ்தி. அதனால மொத புருசன் அதுக்குச் சரிப்படாமப் போனதால, ரெண்டாவதா ஒருத்தனச் சேத்துக்கிட்டா.

அவனும் அதுக்குச் சரிப்படாமப் போனதால, மூணாவதா ஒருத்தங்கூட மூஞ்சி கருக்கல்லுல இந்த கொளத்துப் பக்கம் அடிக்கடி ஒதுங்கிட்டுயிருந்தா. இவ இப்படி ஒதுங்குறது ஊருக்குத் தெரிஞ்சி, ஊரு வாயிலருந்து ரெண்டாவது புருசன் காதுக்குப்போயி, அவன் வாயிலருந்து மொத புருசன் காதுக்குப் போனது. ஒருநாளு ஒண்ணும் ரெண்டும் ஒண்ணு சேந்து மூணையும் அவளையும் போட்டுத்தள்ள, அவுங்க ரெண்டுபேரும் ஒதுங்குறதுக்கு முன்னாடியே போயி இவனுவ கொளத்தாங்கரையில ஒளிஞ்சிக்கிட்டானுவ. அவனும் அவளும் ஆளுவ யாராவது வர்றாங்களான்னு நோட்டம் பாத்துட்டு ஒடமூட்டுக்குள்ள ஒதுங்கவும், இவனுவ ரெண்டுபேரும் பையப் போவாம. மாடு களஞ்சா மடத்தனமா ஓடும், அந்தமாறி ஒடமூட்டப் பாத்து ஓடியிருக்கானுவ. மூணாவதுக்காரன் முத்தம் குடுக்கும்போது என்னடா சத்தமுன்னு எட்டிப் பாத்துட்டு எடுத்துட்டான் ஓட்டம்! இவ ரெண்டு புருசங்காரனையும் ரெண்டு கண்ணாலப் பாத்தப் பயத்துல ரெண்டு காலும் நடுநடுங்க, எப்படியும் இவனுவக்கிட்ட மாட்னா அடிச்சே கொன்னுருவானுவன்னு, அவளே இந்தக் கொளத்துல வுழுந்து செத்துட்டா! அன்னையிலிருந்து வாட்ட சாட்டமான ஆளுவ யாராவது குளிக்க வந்தா, தண்ணிக்குள்ள இழுத்துக்கிட்டுப் போயிடுவா. "

"அண்ணே! நீங்க சொல்றமாதிரி அந்த வெளங்காதவ வாட்ட சாட்டமான ஆளத்தான இழுத்துட்டுப் போணும். எதுக்கு வயசான எங்க மச்சான இழுத்துட்டுப் போனா?!" இளங்கோவன் முதல் மாப்பிள்ளை பெருங்கோபம் கொண்டு நம்பியிடம் கேட்டான்.

"அதொரு பெரிய ரகசியம். ஊருக்குள்ள எவனுக்கும் தெரியாது. எனக்கு மட்டுந்தான் தெரியும். ஒங்கக்கிட்டச் சொன்னா ஊருக்காரனுவக்கிட்ட ஒளறிற மாட்டியளே" நம்பி பம்மியபடி கேட்டார்.

"சாமி சத்தியமா, எங்கம்மா சத்தியமா, எங்கப் புள்ளயளு மேல சத்தியமா யாருட்டயும் சொல்ல மாட்டோம்."

நம்பி அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, "ரெண்டு புருசங்காரி மூணாவதா ஒருத்தனக் கூட்டிட்டு ஒட மூட்டுக்குள்ளப் போனதா சொன்னமில்லா"

"ஆமா சொன்னீங்க" இருவரும் ஒருசேர சொன்னனர். அடுத்து நம்பி வாய்த்திறக்கும் முன், "அண்ணே ஒண்ணு மட்டும் சொல்றேன். ரெண்டு புருசங்காரி தப்பானவளாயிருந்தாலும் நம்பி வந்த ஒரு பொம்பளய நடுக்காட்டுல உட்டுட்டு ஓடுன அந்த ஓடுகாலனுக்கெல்லாம் நல்ல சாக்காலமே வராதுண்ணே!" என்றான் இளங்கோவனின் இரண்டாவது மாப்பிள்ளை.

"ஒன் வாயில சீனிய அள்ளிப் போட! கரைட்டா சொன்ன. அதான் அவனுக்கு இப்படியொரு சாக்காலம் வந்துருக்கு" நம்பி சொன்னதும் இளங்கோவன் மாப்பிள்ளைமார்கள் இருவரும் திகைத்துப் போய், "என்ன சொல்றீங்கண்ணே? நெசமாவா!!" என்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கரையில் உட்கார்ந்து விட்டனர்.

"ஆமாப்பா, அன்னைக்கி ஒட மூட்டுலருந்து ஓடுனது வேற யாருமில்ல ஒங்க மச்சான் எளங்கோ தான். அவன் உசுரயெடுக்கத்தான் ரொம்ப நாளா... காத்துட்டுருந்தா! இன்னைக்கி வசமா அவக்கிட்ட மாட்டிக்கிட்டான்." நம்பி கழுத்தில் கிடந்த அழுக்குத் துண்டையெடுத்து அவுக்கென்று வாயில் திணித்துக் கொண்டார்.

தண்ணீருக்குள் நீண்ட நேரம் மூச்சடக்கும் இளங்கோவனால் அதற்குமேல் சிரிப்பினை அடக்க முடியாமல் பூவரசு மரத்தின் கிளையிலமர்ந்து புணில்(தவிட்டுக்) குருவிகள் கத்துவதுபோல் கும்மமாகயிருந்த நொச்சி மூட்டிலிருந்து சிரித்தபடி வெளியே வந்தார். மச்சானைப் பார்த்த மாப்பிள்ளைகள், "மனுசன்னா நீரு! கொஞ்ச நேரத்துல எங்க கொலய நடுங்கிப் போச்சி. ஆமா... கொளத்துல முங்குன நீரு கரைக்கி எப்படி வந்தீரு?" என்றனர்.

"நீங்க ரெண்டுபேரும் என்னத்தேடி கொளத்துல ஏறங்குனதும், நா அந்தா... கரைய ஒட்டியிருக்குற ஊமத்தஞ்செடிகளுக்குப் பின்னால எந்துச்சி அப்புமே வெளில வந்துட்டேன்" என்று இளங்கோவன் ஊமத்தம் பூவாய் சிரித்து, "சின்னப்பயலுவக்கூட நம்பி சொன்ன கதைய நம்பாம, யாரு காதுலப் பூச்சுத்துறீருன்னு எதுத்துக் கேட்டுருப்பானுவ. ஆனா, நீங்க மல மாடுவமாறி வளந்தும் அவன் வுட்டக் கதயைக் கேட்டு, ரெண்டுபேரும் மண்டைய மண்டைய ஆட்டுனதப்பாத்தா எனக்கு சிரிச்சி வயிறே வலிச்சிப்போச்சி. சின்ன மாப்ள என்னன்னா, அந்த 'ஓடுகாலனுக்கெல்லாம் நல்லச் சாக்காலம் வராது'ன்னு சாவம் விடுறாரு. நானாவோய் 'ஓடுகாலன்' ஒக்காப்புண்ணாக்கு! " என்று சின்ன மாப்ள நடுமுதுகில் சிறிய குத்தொன்று விட்டார் இளங்கோவன்.

அவர்களும் சிரித்துக்கொண்டே, "எங்களுக்கும் தெரியும் அவரு கத தான் உட்டாருன்னு. நாங்க ஒண்ணும் அத நம்பலயே" என்ற மாப்பிள்ளைமார்களை, "மண்ணாங்கட்டி! முட்டாயிக் கேட்டு அழுது மூஞ்சி மோரையெல்லாம் வீங்கிப்போன சின்னப்புள்ளையப்போல ஒங்க மூஞ்சிங்கப் போனபோக்க தான் மறைஞ்சிருந்து நா பாத்தன"- மீண்டும் முதுகில் ஒண்ணு போட்டார் இளங்கோவன்.

"எடே எளங்கோ! ஒன் மாப்பிள்ளைமாருவ இப்படி வெள்ளந்தியாயிருந்தா எப்படிடே மண்ணள்ளிப் போட்டா மண்ணு கீழ உளாத பம்பாயி ஊர்ல காலந்தள்ளுறானுவ?" என்று சூடான பொறிக்கான் சட்டியில் அரிசியைப் போட்டதுபோல் சுருசுருவென்று சிரித்தார் நம்பி.

"ஆனா, நீயிருக்கீய... ஐயன் மந்திரம் சொல்லுறமாறி ரெண்டு புருசங்காரி, அது இதுன்னு சும்மா கதைய அடிச்சிவுட்டு, படிச்சப் பயலுவளையே ஏமாத்திப்புட்டிய. ஒங்கிட்ட கொஞ்சம் உசாராத்தான் இருக்கனும் பா" என்று குளத்தில் தண்ணீர்க் கோரிக் குடித்துவிட்டு மாப்பிள்ளைமார்களைக் கூட்டிக்கொண்டு குளத்துக் கரையிலிருந்து கீழிறங்கினார் இளங்கோவன். தண்ணீர்க் குடிக்க கரையிலேறின ஆடுகள்.

நெஞ்சம் மறப்பதில்லை

கார்த்திக் மாதையன்

‘சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
என்றும் விழாவே என் வாழ்விலே...’

ரேடியோவில் இசைஞானியின் இசையில் எஸ்.பி.பியின் குரலில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்க..

அதிகாலை 6 மணி இருக்கும்.

பரபரப்பாக டீ ஆத்திக் கொண்டிருந்தான் சிவநேசன்..

'சிவநேசா.. ஸ்ட்ராங்கா ஒரு டீ...'

'சிவநேசா... சர்க்கரை கொஞ்சம் கம்மியா லைட்டா ஒரு டீ போடு...'

'சிவநேசா... சர்க்கரை கொஞ்சம் தூக்கலா ஸ்ட்ராங்கா ஒரு காப்பி...'

'வழக்கம்போல நமக்கு டிகாஷன் டீ போடு சிவநேசா...'

இங்கே கேசியர், மாஸ்டர், சப்ளையர் எல்லாமே சிவநேசன் தான்.

'. சிவநேசன் டீக்கடை'ன்னு சொன்னால் அந்த சுற்றுவட்டாரத்தில் தெரியாத ஆட்களே கிடையாது. இந்த டீக்கடை சேலம் டவுன் ரயில்வே ஸ்டேஷன் எதிரேதான் உள்ளது. சிவநேசனின் சிரித்த முகத்துக்காகவே இங்கே கூட்டம் கூடும்.

குறிப்பாக 90ஸ் கிட்ஸ்கள் இசைஞானியின் பாடல் கேட்கவே.. விடியற்காலை 6 மணிக்கே சிவநேசன் டீ கடையில வந்து உட்கார்ந்துக்குவாங்க.

விளையாட்டு, அரசியல், சினிமா என காரசாரமான விவாதங்களும் நடக்கும்.

காலை சுமார் பத்து மணி இருக்கும்... கூட்டம் கொஞ்சம் குறைந்து ஒரு சிலரே இருந்த நிலையில் சிவநேசன் மொபைலுக்கு ஒரு அழைப்பு வந்தது.

'ஹலோ நான் சிவநேசன் பேசுறேன் சொல்லுங்க...'

"வணக்கம் சிவநேசன், நான் டைரக்டர் கார்த்திக் ஆபீஸ்ல இருந்து அவருடைய அசிஸ்டன்ட் பேசுறேன்"

"கார்த்திக் சார் ஆபீஸ்ல இருந்தா... வணக்கம் சார்... சொல்லுங்க சார்"

"நாளைக்கு காலைல ஒரு 11 மணிக்கு எங்க ஆபீஸ்க்கு வந்துருங்க உங்களுக்கு ஆடிஷன் இருக்கு"

"சார்... சந்தோஷமா இருக்கு சார், ஆனா நான் இப்போ சேலத்தில் இருக்கேன் சார்..."

"ஓஹோ... அப்படியா .. உங்களால் வர முடியுமா...?"

"கண்டிப்பா... வரேன் சார்..."

"உங்களுக்கு லொகேஷன் சென்ட் பண்றேன் அத ஃபாலோ பண்ணிக்கோங்க
ஓகேவா..."

"ஓகே சார்"

போனில் பேசியதை நினைத்து தீவிர சிந்தனையில் இருந்தான் சிவநேசன்..

'மாஸ்டர் ஒரு டீ..'. என்று ஒரு குரல் வந்தது.

நான் படித்த படிப்பு ஒன்று, விரும்பிய தொழில் ஒன்று இப்போ செய்ற தொழில் ஒன்று. ஆனாலும் காலம் எனனை என்னதான் புரட்டிப் போட்டாலும் என்னுடைய பாதையில் இருந்து நான் திரும்புவதாக இல்லை என்று மனசுக்குள் உறுதியை இறுக்கமாக்கிக் கொண்டான்.

மாலை வழக்கமான நேரத்தை விட முன்கூட்டியே கடை சாத்திவிட்டு வீடு வந்தான்.

"என்னங்க.. இன்னிக்கு நேரமா... வீட்டுக்கு வந்துட்டீங்க..." என்ற மனைவியிடம் "சுமதி ரொம்ப நாளைக்கு அப்புறமா ஒரு சினிமா கம்பெனியில் இருந்து என்னை கூப்பிட்டு இருக்காங்க..." மகிழ்வோடு சொன்னான்.

"என்னடா நல்லா போயிட்டு இருந்துச்சேன்னு பார்த்தேன், மறுபடியும் ஆரம்பிச்சுட்டீங்களா..."

"சொல்றதை கேளு... எதேச்சியாகத்தான் நானும் போட்டோ அனுப்பினேன். திடீர்னு கூப்பிட்டாங்க பெரிய பேனர் வேற... நான் என்ன பண்றது... இந்த ஒரு முறை மட்டும் எனக்கு ஒரு வாய்ப்பு கொடும்மா..."

"என்னமோ பண்ணுங்க போங்க... ஆமா எப்ப கிளம்புறீங்க..?"

"காலைல 11 மணிக்கு அங்க இருக்கனுமாம். இன்னைக்கு சாயந்திரமே கிளம்பியாகனும் அதனால தான் சீக்கிரமா வீட்டுக்கு வந்துட்டேன்"

"இன்னைக்கேவா எங்க போய் தங்குவீங்க..?"

"அதைத்தான் நானும் யோசனை செய்துக்கிட்டு இருக்கிறேன்"

"இந்த ஜென்மத்துல நீங்க திருந்த மாட்டீங்க உங்க இஷ்டம் என்னமோ பண்ணிக்கங்க போங்க" என்றாள் மனைவி.

அவன் சினிமாவை விட்டு விலகி வந்து சரியாக 10 வருடங்கள் ஆகிறது.

அது ஒரு அழகிய கனாக்காலம். மனசுக்குள் அந்தக் காலத்து நினைவுகளைக் கொண்டு வந்தான்.

அப்போதெல்லாம் நரேஷ் வர்மா, புரட்சிக் காந்தன், பாபுச்சந்தர் இவங்களோட ரொம்ப நெருக்கமா இருந்தான். எல்லாரும் ஒன்றாகத் தங்கியிருந்தார்கள். பேச்சுலர் லைப் அது. கனவுகளோட அவங்க சுத்தாத இடமில்லை, நிக்காத டீக்கடையில்லை, பேசாத பேச்சு இல்லை... அது ஒரு தனி வாழ்க்கை.

அவர்களை எல்லாம் பிரிஞ்சு சரியா பத்து வருஷம் ஆகுது. எப்ப சிவநேசனுக்குக் கல்யாணம் ஆனதோ அப்போ விட்டது இந்த சினிமா வாழ்க்கை. ரொம்ப நாளைக்கு அப்புறம் இன்ஸ்டாகிராம்ல விளம்பரம் பார்த்து அவனுடைய போட்டோ அனுப்பி இருந்தான். ஆனா இப்படி திடுதிப்புன்னு கூப்பிடுவாங்கன்னு அவன் எதிர்பார்க்கவே இல்லை.

'அங்க போனா எங்கே தங்குவேன்னு தெரியலையே' என்பதுதான் அவனது கவலையாக இருந்தது, யோசித்தான்.

"அவனது பழைய நண்பர்கள்ல இப்ப யார் யார் எங்க இருக்காங்கன்னே அவனுக்குத் தெரியாது. அவனது பழைய நோட்டில் பாபுச்சந்தர் மொபைல் நம்பர் இருந்ததா ஒரு ஞாபகம் வர, தேடிப் பார்த்து மொபைல் நம்பரை எடுத்தான்.

'.   அப்பவே எப்போதும் தன்னை பிசியாகவே காட்டிக் கொள்பவன் அவன். இப்போ கால் செய்தால் எடுப்பானா..?' என்ற சந்தேகத்திலேயே அவனுக்கு கால் செய்தான்.

ஆச்சரியம் முதல் ரிங்கிலேயே கால் அட்டென்ட் செய்து விட்டான்..

"ஹலோ யார் பேசறது...?"

"டேய் மச்சான் நான்தான்டா..."

"நான்தான்னா..?"

"டேய் நான் சேலத்திலிருந்து சிவநேசன் பேசுறேன் டா..."

"டேய் மச்சான்... எப்படிடா இருக்க..?" ஆச்சரியமாக கேட்டான் பாபுச்சந்தர்..

"நல்லா இருக்கேன்டா..."

"எத்தனை வருஷம் ஆச்சு உன்ன பாத்து... ஆமா... நீ கல்யாணம் பண்ணிட்ட இல்ல... ஃபேமிலி லைப் எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு. பசங்க எல்லாம் நல்லா இருக்காங்களா..?"

"எல்லாரும் நல்லா இருக்காங்கடா.. உனக்கு மேரேஜ் ஆயிடுச்சா பாபு..?"

"நான்தான் அப்பவே சொன்னேனே லைஃப்ல அச்சீவ்மென்ட் பண்ணாம கல்யாணம் பண்ண மாட்டேன்னு..."

"நீதான் அவசரப்பட்டுட்ட. இட்ஸ் ஓகே... இப்ப சந்தோஷமா இருக்கல்ல..,"

"ம்ம்.. இருக்கேன் டா..."

"என்ன விஷயமா போன் பண்ண மச்சான்..."

"மச்சான் ரொம்ப நாள் கழிச்சு ஒரு கம்பெனிக்கு போட்டோ அனுப்பினேன், ஆடிஷனுக்கு கூப்பிட்டு இருக்காங்க. அங்க வந்தா உன் ரூம்ல தங்க முடியுமா மச்சான்... ஒரே ஒரு நாள்தான்"

"என்னடா இப்படி கேட்டுட்ட வாடா..."

"மச்சான் ரூம் அட்ரஸ்..."

"நம்ம இருந்த அதே ரூம் தாண்டா..."

"மச்சான் இன்னமும் அதே ரூம்லயாடா இருக்க..."

"ரூம் செட் ஆகிடுச்சுடா விட மனசு வரல..."

"மச்சான் நீ நல்லா இருக்கல்ல..."

"என்ன மச்சான் டவுட்டா கேக்குற... நல்லாதான்டா இருக்கேன் ஆமா நீ எப்ப கிளம்புற..?"

"காலைல 11 மணிக்கு அங்க இருக்கனும்டா... இப்போ சாயந்திரம் கிளம்பினா அங்க வர நைட்டு 2 மணி ஆயிடும் மச்சான்"

"மச்சான் இன்னைக்கு எனக்கு நைட் ஷுட் இருக்கு. வீட்டு சாவியை நான் வாசக்காலில் உள்ள ஆணியில் மாட்டிட்டு போறேன்... நீ வந்து எடுத்துக்க..."

"ரொம்ப தேங்க்ஸ்டா..."

"டேய் இதுக்கு போய் தேங்க்ஸ்லாம் சொல்லிக்கிட்டு... வா பேசிக்கலாம்..."

இரவு 2 மணி சென்னை வடபழனியில் உள்ள 100 அடி சாலையில் பேருந்து வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சிவநேசன். கமலா திரையரங்கம் பின்புறம் உள்ள அந்த தெருவுக்குள் நுழைந்தான்.

தெருவே கும்மென்று அமைதியாக இருந்தநிலையிலும் காற்றுமட்டும் வேகமாக அடித்துக் கொண்டே இருக்க, கூட்டம் கூட்டமாக நாய்கள் இவனை பார்த்து குறைத்துக் கொண்டே இருந்தது.

இந்த தெருவின் முனையில் தான் ஒரு மயானம் உள்ளது. அது இன்னும் இவன் பயத்தை கிளறியது.

வீட்டின் கேட்டை திறந்து முதல் மாடிக்கு சென்றான். வாசக்கதவில் உள்ள சாவியை எடுத்து பூட்டை திறந்து உள்ளே சென்று லைட் ச்விட்சை போட்டான்.

ஒரு கிச்சன் ஒரு ஹால் மட்டுமே உள்ள அந்த அறையை சுற்றும் முற்றும் பார்த்தான். என்ன ரூம் இவ்வளவு அசுத்தமா வச்சிருக்கான் இவன்.

டேபிளின் மேல் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது..

பாபுச்சந்தரின் படம் போட்டு அவன் இறந்துவிட்டதாக அந்த உள்ளூர் செய்தியில் எழுதியிருந்தது. அதைப் பார்த்த அவனுக்கு தூக்கி வாரி போட்டது.

அந்த நேரம் பார்த்து அங்கே கரண்ட் ஆஃப் ஆக, பதட்டத்துடன் மொபைல்டார்ச் லைட்டை அடித்தான்.

அவசரமாக அங்கே இருந்து வெளியே செல்ல முயற்சித்த பொழுது, கதவு டமால் என்று அடிக்க, பயந்து பின் வாங்கி ஒரு மூலையில் போய் அமர்ந்தான்.

பக்கத்து வீட்டில் யாரோ ஒரு பெண்மணி அழுது கொண்டிருக்கும் சத்தம் கேட்டது.
காதில் கையை வைத்து பொத்திக் கொண்டான்.

கிச்சன் பக்கம் ஏதோ உருளும் சத்தம் கேட்க, மொபைல் டார்ச்சை கிச்சன் பக்கம் திருப்பினான். கதவோரம் கையில் கத்தியும், ரத்தமுமாக பாபுச்சந்தர் நின்று கொண்டிருந்தான்.

பயந்து லைட்டை வேறு பக்கம் திருப்பி, மீண்டும் அங்கு அடித்துப் பார்த்தால்...
பாபுச்சந்தர் அங்கே இல்லை.

கரண்ட் வந்து ஃபேன் ஓடுவதற்குள் மீண்டும் கட் ஆகிவிடவே ஃபேன் சுற்றிக் கொண்டிருந்தது.

லைட்டை ஃபேன் மேலே திருப்பினான்.

தூக்கில் தொங்கி கொண்டிருந்தான் பாபுச்சந்தர்.

கை உதறி மொபைலை கீழே போட்டு விட்டான்.

அதை ஓடிப் போய் எடுத்து சுமதிக்கு கால் செய்தான்.

நம்பர் பிஸியாக இருந்தது.
மீண்டும் மீண்டும் முயற்சிதான்.

ரிங் அடிக்க.. சுமதி அதை அட்டென்ட் செய்தாள்.

ஹலோ.. என்று கூறுவதற்குள் மொபைல் சுவிட்ச் ஆப்.

வீடே கருங்கும்மென்று இருட்டாக இருந்தது.

யாராவது இருக்கீங்களா...?

என்னை எப்படியாவது காப்பாத்துங்க...

நான் தெரியாம வந்து மாட்டிக்கிட்டேன்...

வெளியே உள்ள நாய்கள் அந்தக் கட்டிடத்தைப் பார்த்து குறைத்துக் கொண்டே இருந்த சத்தத்தில் இவன் குரல் வெளியே கேட்கவில்லை.

எப்படி இங்கே இருந்து தப்பிப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்..

நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. யாரோ ஒருவர் கதவை திறப்பது போல இருந்தது வெடவெடத்து எழுந்து நின்றான்.

பார்த்தால் பாபுச்சந்தர்.

ஐயோ பேய்... பேய்... என அலறி அடித்து ஓட பார்த்தான்.

"டேய்... டேய்... மச்சான் என்னடா ஆச்சு உனக்கு... ஏண்டா இப்படி பயப்படுற..?"

"டேய்.... நீ தான்.... செத்துப்.... போயிட்ட இல்ல..."

"நானா? நான் எப்படா செத்தேன்..?"

"அந்த பேப்பர்ல பார்த்தேன்"

ஹா ஹா ஹா ஹா... பலமாக சிரித்தான் பாபுச்சந்தர்.

"அதுவா... எப்பவோ ஒரு ஷார்ட் ஃபிலிம்காக ரெடி பண்ண பேப்பர்டா அது. அத போய் பாத்துட்டு பயந்து இருக்கியே..."

"மச்சான் நெஜமாவாடா சொல்ற..." என்று அருகில் வந்து அவனை கிள்ளிப் பார்த்து, "ஆமா உசுரோட தான் இருக்க..."

"இதுக்குத்தான் அப்பவே சொன்னேன். நைட் டிராவல் பண்ணாதடா... நைட் டிராவல் பண்ணாதடான்னு... நேரம் கெட்ட நேரத்துல வந்துகிட்டு இதெல்லாம் தேவையா..."

"மச்சான் சினிமாவுக்கு ஏதுடா நைட் பகல் அந்த நெனப்புல தான்டா வந்துட்டேன்..."

"அதெல்லாம் அந்த காலம் மச்சான் இப்ப எல்லாம் மாறி போச்சு. நீ நினைக்கிற சினிமா இப்ப இல்லை"

"பாத்தியா ஏதோ ஒன்னு எதேச்சையா நடக்க போக, நீ என்னென்னவோ...
கற்பனை பண்ணிக்கிட்டு அரண்டு போய் நிற்கிற"

"உன்ன வச்சே ஒரு கதை பண்ணலாம் போல இருக்கேடா..." என்று பாபுச்சந்தர் சொல்லிக் கொண்டிருக்க, அவன் செல்லுக்கு சுமதி இடம் இருந்து அழைப்பு வந்தது.

"ஹலோ யார் பேசறது..?"

"அண்ணே நான் சிவநேசன் வைஃப் பேசுறேன்... அவர் அங்க வந்துட்டாரா..?
அவர் நம்பருக்கு ரொம்ப நேரமா ட்ரை பண்றேன்... பிஸினு வருது இல்ல சுவிட்ச் ஆப்னு வருது"

"அதெல்லாம் நல்லபடியா வந்துட்டான்மா... இதோ அவன் கிட்ட கொடுக்கிறேன்"

"என்னங்க ஏங்க மொபைல் சுவிட்ச் ஆப்னு வருது..?"

"சுவிட்ச் ஆப் ஆனா.. சுவிட்ச் ஆப்ன்னுதாம்மா வரும்"

"இந்த லொள்ளுக்கு ஒன்னும் குறைச்சல் இல்லை. சட்டுபுட்டுன்னு வேலைய முடிச்சுட்டு ஊருக்கு வர வழிய பாருங்க... என்னமோ ஏதோ நான் பயந்து போயிட்டேன்"

"சரிமா"

"மச்சான் நீ பேச்சுலரா இருக்கும்போது எந்த நேரம் வேணா போலாம் வரலாம் பட், ஃபேமிலி ஆயிட்டா ரொம்ப கேர்ஃபுல்லா ஹேண்டில் பண்ணனும்... ஓகே. இதுக்குத்தான் என் தலைவன் சொல்லி இருக்கான். எந்த ஒரு விஷயத்தையும் பிளான் பண்ணி பண்ணனும் பிளான் பண்ணாம பண்ணினா இப்படித்தான்னு" சிரித்துக் கொண்டே சொன்னான் பாபுச்சந்தர்.

"அதான் சரி..." என்றான் சிவநேசன்.

தனது ஆடிஷனை வெற்றிகரமாக முடித்துவிட்டு ஊர் திரும்பினான் சிவநேசன்.

‘அனைவரையும் நம்பு; ஆனால் யாரையும் நம்பாதே’

- ஜி. ஏ. பிரபா

பரிவை சே. குமார்

தற்போது எழுதும் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் எழுத்தாளர் ஜி.ஏ.பிரபா. நூற்றுக்கும் மேற்பட்ட நாவல்கள், சிறுகதைகள், ஆன்மீகக் கட்டுரைகளை எழுதியிருக்கும் இவர் தொடர்ந்து இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்றவற்றில் இருக்கும் சின்னச் சின்ன கதாபாத்திரங்களை மையப்படுத்தி எழுதிக் கொண்டிருக்கிறார்.

முதல் சிறுகதையான ‘பங்கு’ வை சொந்தப் பெயரில் எழுதியவர் சில படைப்புக்களுக்குப் பின் புவன பாரதி என்ற புனைப்பெயரில் எழுத ஆரம்பித்திருக்கிறார். உனது சொந்தப் பெயரிலேயே எழுது என்று தனது பள்ளி ஆசிரியர் சொன்னதைத் தொடர்ந்து மீண்டும் சொந்தப் பெயரில் எழுத ஆரம்பித்து இன்று வரை எழுதிக் கொண்டிருப்பவருக்குள் மீண்டும் புவன பாரதி என்ற பெயரில் எழுத வேண்டும் என்ற ஆசை இருக்கிறது.

எளிமையான தமிழில் ஆன்மீக உணர்வுகளையும் மன உறவுகளின் ஆழத்தையும் மிக அழகாக தனது படைப்புகளில் கொண்டு வரும் எழுத்தாளர் ஜி.ஏ.பிரபா அவர்கள், ‘எனக்கென விரியும் வானம்’, ‘பாதை காட்டும் பாரதம்’, ‘நதி வழிப் பயணம்’, ‘கரை சேரும் அலைகள்’, ‘விளக்கு’, ‘சத்திய தீபங்கள்’, ‘காவியம் காட்டும் காரிகைகள்’, ‘கந்தன் புகழ் பாடும் கந்தரலங்காரம்’, ‘பெண் எனும் பெருஞ்சக்தி’, ‘பொக்கிஷம்’, ‘பெண்ணால் மட்டுமே முடியும்’ உள்ளிட்ட நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியிருக்கிறார்.

புதியவர்களின் எழுத்தை ஊக்குவித்து, அவர்களையும் சிறந்த எழுத்தாளர்களாக ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தில், தனது நண்பர்களுடன் இணைந்து ‘சங்கப்பலகை’ என்னும் முகநூல் குழுமத்தை ஆரம்பித்து, அதில்தொடர்ந்து போட்டிகளைகளை நடத்தி, பரிசுகளை கொடுத்து நிறையப் பேரை எழுத வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எழுத்தாளர் ஜி.ஏ.பிரபா அவர்களின் விரிவான நேர்காணல் உங்களுக்காக.

தங்களது இளமைப் பருவம் பற்றிச் சொல்லுங்கள்...?

ரொம்ப உற்சாகமான பொற்காலம். அதிகமான கட்டுப்பாடுகள், பள்ளி பாட அழுத்தங்கள் எதுவும் இல்லாமல் இசையும், இலக்கியமும் கைகோர்த்து நடந்த பருவம் அது. அப்பா பிரைமரி ஹெல்த் சென்டரில் ஹெல்த் இன்ஸ்பெக்டர். கிராமத்தில் குவாட்டர்ஸ் அனைத்துமே ஊரைவிட்டு தள்ளிதான் இருக்கும். ஸ்கூல் முடிந்து வந்ததும் எங்களுடைய நட்பு புத்தகங்களோடு தான். அப்பா அனைத்து வார, மாத, தினசரி பத்திரிக்கைகள் வாங்குவார். அதில் உள்ளவற்றை படிப்பது, இலங்கை ரேடியோவில் தமிழ் பாடல்களைக் கேட்டு ரசிப்பது, வாசலில் அமர்ந்து சுற்றி தெரியும் இயற்கையை ரசிப்பது என்ற காலம் அது.

பள்ளிகளில் பாடமும், ரிசல்ட் மட்டுமே முக்கியம் என்று நினைக்காமல் இலக்கிய அறிவை புகட்டிய தமிழாசிரியர்கள். 12-வது முடிக்கும்போதே எனக்கு அனைத்து இதிகாசங்களும், சங்க இலக்கியங்களும் பரிச்சயம் ஆகி இருந்தது. பாடத்தோடு சேர்ந்து நல்ல, நல்ல விஷயங்களைச் சொல்லி எங்களை ஊக்கப்படுத்திய ஆசிரியர்கள் எனக்குக் கிடைத்த மிகப்பெரும் பொக்கிஷம்.

ஒவ்வொரு ஆசிரியர்களும் என்னுடைய முன்னேற்றத்தின் தனிப்பட்ட முக்கியத்துவம் உள்ளவர்கள். ஆங்கிலம், தமிழ் என்று இலக்கியங்களைப் போதித்தவர்கள், அறிவியல் என்று உடல் உள் உறுப்புகளை பற்றி ஒரு பிரம்மிப்பையும், இதுதான் ஆண்டவன் படைப்பு என்று உணர்த்திய ஆசிரியர்கள், அனைத்து வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறி, வரலாற்றுப் பாடங்களோடு சேர்ந்து இந்திய உலக வரலாற்றையும் போதித்த ஆசிரியர்கள் என்னுடைய வழிகாட்டிகள்.

பத்தாவது படிக்கும்போதே அம்புலி மாமாவில் சிறுகதை எழுதினேன். நிறைய கையெழுத்து பத்திரிகைகள் நடத்திய ஆசிரியர்கள் என்னை அதில் எழுத ஊக்குவித்தார்கள். எனக்கு நன்னெறியை போதித்த தமிழ் ஆசிரியர்கள். ஒவ்வொரு கட்டத்திலும் என்னை கை தூக்கி விட்டிருக்கிறார்கள். அதுதான் என்னுடைய இன்றைய நிலைக்குக் காரணம்.

மறக்க முடியாத ஆசிரியர்கள். பள்ளிப் பருவத்தில் என்னுடன் படித்த நண்பர்கள், 40 வருடம் கழித்து இப்பொழுது என்னைக் கண்டுபிடித்து என்னோடு இப்போது தொடர்பில் இருக்கிறார்கள். அப்பா ஊர் ஊராக மாற்றல் என்பதால், எந்த ஊரிலும் நான் நிரந்தரமாகப் படித்ததில்லை. பிளஸ் டூ வகுப்பில் காலாண்டு ஒரு இடத்தில், அரையாண்டு ஒரு இடத்தில், முழு ஆண்டு ஒரு இடத்தில் என்று எழுதினேன்.

படித்தது எல்லாமே அரசுப் பள்ளியில்தான். அதேபோல் பிளஸ் டூ ஆங்கில மீடியத்தில் சேர்ந்து தமிழ் மீடியத்தில் தேர்வு எழுதி கடவுள் அருளால் தேர்ச்சி பெற்றேன். (நான்தான் முதல் செட். தப்பித்தேன்) ஒவ்வொரு காலகட்டத்திலும் எனக்கு கிடைத்த நண்பர்கள் எனக்கு ஒரு பாதுகாப்பு கவசமாக இருந்தார்கள். இப்பொழுது இருக்கும் சீண்டல்கள் எதுவும் எனக்கு அப்போது இல்லை. நாங்கள் எங்கள் வகுப்பு மாணவிகளுக்கு கேடயங்கள் என்று சொல்லியே அனைத்து மாணவர்களும் இருந்தார்கள். நான் படித்தது கோ எஜுகேஷன்தான் என்றாலும், இன்று வரை ஒரு சிலரின் நட்பு எனக்கு தொடர்ந்து வருகிறது. நினைத்து நினைத்து மகிழக்கூடிய இளமைப் பருவத்தைக் கொடுத்த ஆண்டவனுக்குத்தான் நன்றி.

தங்களின் முதல் படைப்பு எது...? அது எதில் பிரசுரமானது?

பத்திரிக்கையில் வெளியான முதல் படைப்பு ‘பங்கு’ என்ற சிறுகதை. அதற்கு முன் சிறிது சிறிதாக கையெழுத்துப் பத்திரிக்கையில் எழுதினாலும், அதெல்லாம் எங்களுக்குள்ளேயே, ஆனால் ஆனந்த விகடனில் வெளியானதுதான் முதல் படைப்பு. 1982ல் ஆனந்த விகடன் மாணவர் பக்கத்தில் ‘பங்கு’ என்ற சிறுகதை பிரசுரம் ஆகியது.

நான் இரண்டாம் வருடம் படிக்கும்போது, அனுப்பிய கதை மூன்றாம் வருடத்திற்கான முதல் நாள் கல்லூரிக்கு கிளம்பும்போது வந்தது. எவ்வளவு ஆனந்தமான நாட்கள் அது! அந்தப் புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு குவார்ட்ரஸ் முழுக்க சுற்றினேன். அனைவரிடமும் போய்ப்போய் பகிர்ந்து கொண்டேன். மறுநாள் கல்லூரிக்குள் நுழைந்து எங்களுடைய ஓய்வறையை நோக்கி நடக்கும் போது திரு சே.சு. பழனிச்சாமி என்ற தமிழாசிரியர் என்னை அழைத்து “உன்னுடைய கதையைப் படித்தேன் பிரபா. நன்றாக இருக்கிறது. இதோடு நிறுத்தி விடாதே. மேலும் தொடர்ந்து செல்” என்றார். அதுதான் எனக்கு கிடைத்த முதல் பாராட்டு, ஊக்குவிப்பு.

அதன் பின் கல்லூரிக்குள் வந்த கடிதங்கள் ஏகப்பட்டது இருக்கும். 500 கடிதங்களுக்கு மேல் பியூன் கொண்டு வந்து ஓய்வறையில் வைத்து விட்டு, “என்ன உனக்கு இத்தனை கடிதம் வருகிறது?” என்று கேட்டு விட்டுப் போவார். அலுவலகம், ஆசிரியர் அறை என்று எல்லாப் பக்கமும் என்னுடைய பெயர் ஒலிக்க ஆரம்பித்தது. அதே வருடம் அமுதசுரபி தீபாவளி மலர் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு, தாய் நடத்திய தலைப்புக்கேற்ற சிறுகதைப் போட்டியிலும் முதல் பரிசு. அடுத்தடுத்து சே.சு. பழனிச்சாமி சாரின் அறிவுறுத்தலில் என்னுடைய பயணம் எழுத்துடன்தான் என்று இந்த பிரபஞ்சம் உறுதிப்படுத்தியது

தாங்கள் பெரும்பாலும் ஆன்மிகம் சம்பந்தமான கட்டுரைகள், கதைகள் எழுதுவதற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா...?

அது இயற்கையாக அமைந்தது. இப்படித்தான் எழுதவேண்டும் என்று நான் எந்தக் கற்பனையும் செய்யவில்லை. என்னிடம் என்ன கதை கேட்கிறார்களோ, அதை எழுதுவேன். ஆனால் எனக்கான வாய்ப்புகள் ஆன்மீகத்தில் தேடி வந்தது. ஆசிரியர் பணி ஏற்ற பிறகு என்னுடைய மாணவிகளுக்கு புராணங்கள், இதிகாசங்களில் இருந்து நான் கதைகள் சொல்வேன். அப்பொழுது ஒரு மாணவி “இதையெல்லாம் தொகுத்து நீங்கள் புத்தகமாகப் போட்டால் எங்களுக்கு உதவியாக இருக்குமே” என்றாள்.

அதே நேரத்தில் தினமலர் பெண்கள் மலரில் எழுதும் வாய்ப்பு கிடைத்து. பாதை காட்டும் பாரதம், ரிக்வேத கால பெண்களைப் பற்றி, மாயப் பொய்கை என்று தொடர்ந்து எழுதினேன். அடுத்தடுத்து மாலை மலரில் லலிதா சகஸ்ரநாமம், விஷ்ணு சஹஸ்ரநாமம், கந்தர் அலங்காரம் என்று எழுத ஆரம்பித்தேன். இதற்காகப் பல புத்தகங்களை படிக்கும் போது நம்முடைய ஆன்மிகம், இறை சக்தி ஒன்றின் மூலம் எத்தனை நல்ல விஷயங்களை புகுத்தி இருக்கிறது என்று புரிந்தது.

அதன்பின் தேடித்தேடி படிக்க ஆரம்பித்தேன். நான் படித்த நல்ல விஷயங்களை நாலு பேருக்கு சொல்ல வேண்டும் என்ற ஆசையில் எழுத ஆரம்பித்ததே ஆன்மீகம். அது ஒரு தேடல். தீராத தாகமும், அறியும் ஆசையும், ஆழ்ந்து அதற்குள் பயணிக்க வைத்தது. மேலும் பல விஷயங்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. இதில் எனக்கு ஏற்படும் ஆத்ம திருப்தி வார்த்தையில் சொல்ல முடியாது. வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம், ஆன்மீக விஷயங்களை எழுதும்போது எனக்கு கிடைக்கிறது.

இயற்பெயரில்தான் எழுதுகிறீர்கள், புனைப்பெயரில் எழுதிய அனுபவம் எதுவும் உண்டா...?

ஸ்ரீ சாந்தானந்த சத்குரு சுவாமிகள் என்னுடைய முதல் கதை வெளியான போது, என் தாத்தா வீட்டிற்கு வந்திருந்தார். அவரை நமஸ்காரம் செய்து விட்டு கதை எழுதிய விவரத்தைக் கூறிய போது புவன பாரதி என்ற பெயரில், ராஜி என்ற கேரக்டர் பெயர் வருமாறு எழுது என்றார்.

நான் அதில்தான் அடுத்தடுத்து எழுத ஆரம்பித்தேன். இரண்டு மூன்று சிறுகதைகள் வெளியாகியது. பிறகு ஒரு பட்டிமன்றத்தில் தமிழாசிரியர் திரு. பழனிச்சாமி அவர்களை சந்தித்த போது “ஏன் பிறகு எழுதவில்லை?” என்று கேட்டார். நான் விஷயம் சொன்னதும் “புனைப்பெயர் நல்லதுதான். ஆனாலும் ஜி ஏ பிரபா என்ற பெயரில் எழுதினால் எங்களுக்கு, இது நம் மாணவி என்று தெரியும்” என்றார். அவருடைய சொல்லுக்கு மரியாதை கொடுத்து நான் ஜி ஏ பிரபா என்ற பெயரில் எழுத ஆரம்பித்தேன்.

இந்தப் பெயரை வைத்துதான் 1978-இல் என் உடன் படித்த ஒரு மாணவர் குழு 2021-இல் என்னை அடையாளம் கண்டுபிடித்து தற்போது கோவையில் நாங்கள் சந்திக்கிறோம், நட்பு தொடர்கிறது. ஆனாலும் புவன பாரதி என்ற பெயரிலும் எழுத வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதற்கென்று ஒரு தனிப்பட்ட கருத்துக்களை வைத்து அந்த கதைகளை புவன பாரதி என்ற பெயரில் எழுதலாமா என்ற யோசனையில் இருக்கிறேன்.



தாங்கள் சிறுகதைகளை விட நாவல் அதிகமாக எழுதியிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன், அதற்கான நேரத்தை எப்படி ஒதுக்குகிறீர்கள்?

எழுதுவதைத் தவிர வேற வேலை இல்லை. அம்மா நீ எழுத்தைப் பார். இது என்றைக்கும் இருக்கக்கூடிய விஷயம். மற்ற விஷயங்களை நான் கவனித்துக் கொள்கிறேன் என்பார். ஸ்கூல் நேரம் முடிந்து வீட்டில் எழுதிக் கொண்டிருப்பேன். சனி ஞாயிறுகளில் எழுதுவேன். அதற்கான நேரத்தை ஒதுக்கி கொள்வேன். முதலில் பேப்பரில் எழுதிக் கொண்டிருந்தேன். இப்பொழுது கணினியை வைத்து எழுதுகிறேன். மொபைலில் வாய்ஸ் டைப்பிங் கற்றுக் கொண்டதால், இப்போது எழுதுவது இன்னும் சுலபமாகிவிட்டது.

2001-இல் தான் கண்மணியில் முதல் நாவல் வெளியானது. அதன் பிறகு அடுத்தடுத்து பத்திரிகைகள் கேட்க ஆரம்பித்ததும், கடவுள் அருளில் எனக்கான கற்பனை வளமும் வந்தது. எந்நேரமும் எழுதிக் கொண்டுதான் இருப்பேன். வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் அப்பாவும் அம்மாவும் ஏற்றுக்கொண்டார்கள். அப்பா இறந்த பிறகு சிறிது அந்த பொறுப்பு என் தோளில் விழுந்தது என்றாலும், ஓய்வு பெற்ற பிறகு என்னுடைய முழு நேரத்தையும் எழுத்தில் தான் செலவிடுகிறேன். எந்த விஷயங்கள் செய்து கொண்டிருந்தாலும் என் மனம் எழுத வேண்டியதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும். உடனுக்குடனே அதற்கான குறிப்பு எழுதி வைத்துக் கொள்வேன். ஆனால் நாவல் கேட்கும் போது தான் எழுதி அனுப்புகிறேன். அதற்கு சிறிது தாமதம் ஆகிவிடுகிறது.

என் நண்பர் திரு சப்தரிஷி ஒரு ஐடியா கொடுத்திருக்கிறார். உன் மனதில் ஒரு நாவலோ, சிறுகதையோ அதற்கான கருத்து உருவாகும் போதே அதை எழுதி வைத்துவிடு. கேட்பவர்களுக்கு உடனே அனுப்ப முடியும் என்று கூறியிருக்கிறார். இனி அதை பின்பற்றலாமா என்று இருக்கிறேன். வாழ்க்கைப் பயணத்தில் இந்த மாதிரி சின்னச்சின்ன அறிவுரைகளும் ஆலோசனைகளும் தான் நம் பாதையை சுலபமாக்குகிறது. கடக்க உதவுகிறது.

தங்களின் எழுத்துப் பணிக்குக் கிடைத்த விருதுகள் பற்றிச் சொல்லுங்களேன்?

பாதை காட்டும் பாரதம் என்ற நூலுக்கு திருப்பூர் சக்தி விருது கிடைத்தது. அதன் பிறகு ஒரு இலக்கிய அமைப்பு அதற்கு பரிசு கொடுத்தது. அதன் பிறகு தினமணியும் நெய்வேலி புத்தகக் கண்காட்சியும் இணைந்து நடத்திய போட்டியில் சிறந்த பெண் எழுத்தாளர் விருது கிடைத்தது. அது தவிர பிரபல பத்திரிகைகள் நடத்திய அனைத்து சிறுகதைப் போட்டிகளிலும் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறேன். ஆனந்த விகடன் பவள விழா, கலைமகள் குறுநாவல் போட்டி, பெண்மணி என்ற பத்திரிகை ஒரு முறை நடத்தியதில் லலிதா ஜுவல்லரியின் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு நெக்லஸ் (அப்பொழுது) இரண்டு பவுன் கிடைத்தது. இப்பொழுது நினைத்து கூட பார்க்க முடியாது.

இது தவிர இலக்கிய அமைப்புகள் அவ்வப்போது சில அவார்டுகள் கொடுக்கும். அது எல்லாமே என்னுடைய எழுத்துக்கு கிடைத்த பரிசு. அதுக்கு முழு முழு தகுதியானது அந்த எழுத்துக்கள் தான். விருதுகள் என்னை உற்சாகப்படுத்துகிறது. அது உண்மை. ஆனால் விருதுக்காக எதையும் எழுதுவதில்லை. கிடைக்கும்போது உற்சாகப்படுவேன். இல்லை எனும் போது அதை பற்றி கவலைப்படாமல் அடுத்தடுத்து நகர்ந்து கொண்டே இருப்பேன். நகர்வது தானே வாழ்க்கை.

தாங்கள் ஆசிரியையாக இருந்தவர் அல்லவா...? தங்களின் மாணக்கர்களில் யாரேனும் தங்களால் எழுத்தாளர் ஆகியிருக்கிறார்களா?

வெளிப்பத்திரிகைகளில் எழுதியதில்லை என்றாலும் சின்னச்சின்ன ஓவியங்கள் எல்லாம் அவர்களை உற்சாகப்படுத்தி சிறுவர் பகுதிகளுக்கு அனுப்ப சொல்லுவேன். அது மாதிரி சில மாணவிகளுடைய ஓவியங்கள் பத்திரிகைகளில் வெளிவரும். சிறுவர் பகுதிகளில் வெளியாகி இருக்கிறது. குழந்தைகள் அதை ஆர்வமாகக் கொண்டு வந்து என்னிடம் காண்பிக்கும் போது அவர்களை வாழ்த்தி, பாராட்டி பிரேயரில் அவர்களைப் பற்றி

ஒரு சில வார்த்தைகள் சொல்லுவேன். இது மற்றவர்களுக்கு உந்து சக்தியாக இருக்கும். சில பேர் எனக்கு கதைகள் எழுதிக் கொண்டு வந்து காண்பிப்பார்கள். அதை நான் திருத்திக் கொடுப்பேன். ஆனால் அதை அவர்கள் பத்திரிகைகளுக்கு எழுத முடிந்ததில்லை. ஏனென்று கேட்டபோது, படிக்கிறதே மிகச் சரியாக இருக்கிறது மேடம். எங்களுக்கு நேரமே இல்லை என்கிறார்கள். அதற்கான நேரத்தை ஒதுக்கி கொள்ள வேண்டும் என்றால், எந்த கருவும் தோன்ற மாட்டேன் என்கிறது என்கிறார்கள். ஆனால் எனக்கு ஒரு சின்ன குறை மட்டும் உண்டு. என்னுடைய மாணவிகளில் யாரும் எழுத்தில் ஆர்வம் காட்டவில்லையே என்று ஒரு ஏக்கம் உண்டு. ஆனால் அந்த ஏக்கத்தை தற்போது சங்கப் பலகை தீர்த்து வைக்கிறது

சங்கப்பலகை முகநூல் குழுமத்தை ஆரம்பித்து அதில் தாங்கள் நட்புக்களுடன் இணைந்து பல போட்டிகளை நடத்தி, உடனுக்குடன் பரிசுகளும் வழங்குகிறீர்கள். இந்த எண்ணம் எப்படித் தோன்றியது?

2019-ல் கொரோனா வந்து பள்ளிகள் விடுமுறை விடப்பட்டு வீட்டிலேயே இருந்த காலம். அப்பொழுது எனது வலது காலில் ஒரு சின்ன எலும்பு விரிச்சல் விட்டிருந்தது அதற்கு வீட்டிலேயே கட்டுப்போட்டு இருக்க வேண்டிய நேரம். மனது மிகவும் சோர்ந்து வீட்டில் இருந்த நேரம், என்னை நானே உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசையில், அனைவரையும் பார்த்துப் பேச வேண்டும், பழக வேண்டும், என்ற ஒரு ஆர்வம். அதற்காக whatsapp குழு ஒன்று ஆரம்பித்தேன். ஆனால் அதில் யாரும் எதையும் கண்டுகொள்ளவில்லை. எனவே அப்பொழுதுதான் முகநூலில் நுழைந்து சிறிது சிறிதாக அதைப் பற்றி அறிய ஆரம்பித்து இருந்தேன். அதில் கிரியேட் குரூப் என்று ஒரு ஆப்ஷன் வந்தபோது, இதில் ஆரம்பித்தால் என்ன என்று சங்கப் பலகை குழுவை ஆரம்பித்தேன்

தாங்கள் படித்த நல்ல இலக்கியங்களை, கதைகளை ரசித்த விஷயங்களை, தாங்கள் எழுத வேண்டும் என்று விரும்புவதை அதில் எழுதலாம் என்ற கொள்கையோடு நாங்கள் ஆரம்பித்தது.

நான் ஆரம்பித்த உடனேயே கணேஷ் பாலா, ரிஷபன் சார், சுரேஷ் சந்த் என்ற மூவரையும் குழுவில் இணைத்தேன். அவர்களும் ஆர்வத்தோடு வந்து இணைந்தார்கள். அதன் பிறகு அவரவர்கள் தங்களுக்கு தெரிந்த நண்பர்களை சங்கப் பலகையில் இணைத்தார்கள். கணேஷ் பாலா தன்னிடம் உள்ள பொக்கிஷத்தில் இருந்து அழகழகான புகைப்படங்களை போட ஆரம்பித்தார். வெறுமனே அதை பார்த்து கடந்து போவதை விட இதற்கு சிறுகதை போட்டிகள் நடத்தலாமே என்று நினைத்து அதற்கான போட்டிகள் அறிவித்தேன்.

அதன் பிறகு அது சிறிது சிறிதாக விரிவடைந்து இன்று சங்கப் பலகை ஒரு மிகப்பெரிய இலக்கிய குழுவாக எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய குழுவாக இருக்கிறது. இதற்குக் காரணம் இதில் உள்ள அனைவருமே தான். என்னுடைய ஆசைகள் அனைத்திற்கும் 'டன்' என்று கைகொடுக்கும் அட்மின்கள். சொன்னதும் உடனடியாக 'மடமட'வென்று எழுதும் உறுப்பினர்கள் என்று குதூகலமாக போகிறது சங்கப் பலகை. இதற்கு எங்களுக்கு அதிகம் உற்சாகம் தந்தது திரு இந்திரா சௌந்தர்ராஜன் சார். அவருடைய ஆசிர்வாதம்தான் இந்த வளர்ச்சிக்குக் காரணம்.

தற்போது திரு ரவி பிரகாஷ் சார், குங்குமம் ஆசிரியர் திரு கே. என். சிவராமன் சார் எங்களுக்கு பலமாக இருக்கிறார்கள்.

தாங்கள் கண்ட கனவு நனவானதாகச் சொல்லியிருந்தீர்கள், அப்படிக் கண்ட கனவை வைத்து ஏதேனும் நாவல் எழுதிய அனுபவம் உண்டா...? இனிமேல் எழுதும் எண்ணம் எதுவும் இருக்கிறதா?

வாழ்க்கையில் நிறைய கனவுகள் அனைவருக்குமே இருக்கும். வாழ்க்கை முறையைப் பொறுத்த வரை எனக்கு கனவுகள் என்று எதுவும் இல்லை. ஏனெனில் நான் கண்ட கனவு வேறு, நடக்கும் விஷயங்கள் வேறு எனும் போது, நான் நடப்பதை ஏற்றுக் கொள்ள அதன் வழியில் பயணப்பட பழகி விட்டேன் ஆனால் எழுத்து உலகைப் பொறுத்தவரை என்னுடைய கனவு இன்னும் சிறு பாக்கி இருக்கிறது. மிகப் பிரபலமான எழுத்தாளராக வேண்டும், இன்னும் நிறைய நல்ல விஷயங்களை எழுத வேண்டும் என்ற கனவு இருக்கிறது.

அதையெல்லாம் எனக்கு தூங்கும் போது கனவில் வரும். உள் மனதின் ஆழ் ஆசைகள் தான் கனவுகள் என்பார்கள். ஆனால் இன்னும் அந்தக் கனவே பிரதிபலிக்கும் கதையை நான் எழுதவில்லை. ஏனெனில் எழுத்தைப் பொருத்தவரை என்னுடைய கனவுகள் மாறிக் கொண்டே தான் இருக்கிறது. ஆனால் நிரந்தரமாக இருப்பது, நல்ல விஷயங்களை எழுத வேண்டும். இந்த சமூகத்துக்கு நாலு நல்ல விஷயங்களை சொல்ல வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது.

மற்றபடி ஒவ்வொரு எழுத்தாளரைப் பொருத்தவரைக்கும் அந்த விருதுகள் வாங்க வேண்டும், இந்த பரிசுகள் வாங்க வேண்டும் என்ற ஆசைகள் இருக்குமல்லவா... அந்த ஆசைகள் எல்லாம் எனக்கும் உண்டு. அதில் பொய் சொல்ல விரும்பவில்லை.

சங்கப் பலகையில் எழுதுபவர்கள் பலர் இப்போது எழுத்துலகில் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். புதியவர்களின் எழுத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?

குறை சொல்லும்படி புதியவர்களின் எழுத்து இல்லை. ஒவ்வொருவர் எழுத்தும் சிறப்பான கருத்துக்களுடன், முதிர்ந்த எழுத்துத் திறமையுடன், சொல்ல வந்ததை 'நச்'சென்று சொல்லும் திறமையும் அவர்களிடம் இருக்கிறது. பொதுவாக வெளித்தளத்தில் எழுதிக் கொண்டிருப்பவர்கள் தான் இப்பொழுது புதிதாக சேர்ந்து சங்கப் பலகையில் எழுதுகிறார்கள்.

ஒவ்வொருத்தரும் தாங்கள் எழுதிய புத்தகங்களை, கவிதைகளை, சிறுகதை தொகுப்புகளை நம் சங்கப் பலகையில் பகிர்ந்து கொள்ளும் போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. புதிதாக அதிக உறுப்பினர்களை சேர்ப்பதில்லை. குறைவாக இருந்தாலும் இலக்கிய தாகத்தோடு பயணிப்பவர்கள் மட்டுமே இந்த குழுவில் இருந்தால் போதும் என்று முடிவெடுத்திருக்கிறோம். 250 உறுப்பினர்கள் தான் இருப்பார்கள் இதிலும் ஒரு சிலர் தான் ஆக்டிவா இருக்கிறார்கள். தவிர மற்றவர்கள் அவ்வளவுக்காக இல்லை என்றாலும் இருப்பவர்கள் ஒருநாள் இதில் எழுதுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சிலருக்கு சங்கப் பலகையில் எழுதி என்ன பிரயோஜனம்? யாரும் லைக் கமெண்ட் போடுவதில்லை என்ற நினைப்பு இருக்கிறது. என்றாலும் அவர்கள் மற்றவர்களின் கதைகளை படித்துவிட்டு, தங்கள் படைப்புகளை வெளிப் பத்திரிக்கைகளில் வெளியிட்டாலும் சந்தோஷமே எங்களுக்கு. அதற்காக ஆரம்பித்த குழு தானே இது.

சமீபமாய் சங்கப் பலகையில் எழுதுபவர்களில் தங்களைக் கவர்ந்த சிறந்த எழுத்தாளர்கள் என யாரைச் சொல்வீர்கள்? (பிரபலங்களைத் தவிர்த்து விடுங்கள்)

குறிப்பிட்டுத் தனித்து சொல்ல முடியவில்லை. ஏனெனில் ஒவ்வொருவருமே தங்கள் எழுதும் படைப்புகளில் தங்களுடைய திறமையை காட்டுகிறார்கள். ஆரம்பித்த புதிதில் 'பஞ்சமுகி' என்ற பெயரில் ஐந்து பேர் இணைந்து கதைகள், தொடர்கள் எழுதினார்கள். அவர்கள் இன்று மற்ற பத்திரிகைகளில் பிரபலமாக எழுதி பரிசுகள் வென்று வருகிறார்கள்.

தற்போது குழுவில் எழுதுபவர்கள் மிகச் சிறப்பாக எழுதுகிறார்கள். போட்டிகள் நடக்கும் போது, சிறந்த கதையை தேர்ந்தெடுக்க நடுவர்கள் திணறுகிறார்கள் என்பதுதான் உண்மை.

ஒரு சிலர்தான் தொடர்ந்து எழுதுகிறார்கள். நாங்கள் எல்லோரையும் உற்சாகப்படுத்தவே, அமானுஷ்ய குறுநாவல் போட்டி, மாத குறுநாவல் போட்டி, ஒரு பக்க கதை என்று பல போட்டிகள் அறிவித்தோம். குறிப்பிட்ட சிலர்தான் அதில் மீண்டும் மீண்டும் கலந்து கொள்கிறார்கள். அவர்கள் அனைவரின் எழுத்துக்களும் மிகச் சிறப்பாக இருக்கிறது. ஒரு சிலரை மட்டும் குறிப்பிட விரும்பவில்லை. ஏனெனில் எல்லோருமே மிகச் சிறப்பாக எழுதுபவர்கள்தான். சங்கப் பலகையின் உறுப்பினர்கள் என்ற ஒரு சொல்லே அவர்களின் திறமையை வெளிப்படுத்தி விடும்

தாங்கள் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை வைத்து பல ஆன்மீக கட்டுரைகள், கதைகள் எழுதியிருக்கிறீர்கள். இதுபோல் வேறு ஏதாவது காப்பியத்தை வைத்து நாவல் எழுதும் எண்ணம் இருக்கிறதா?

சிலப்பதிகாரம், ஐம்பெரும் காப்பியங்களை வைத்து 'காவியம் காட்டும் காரிகைகள்' என்று ஒரு தொடர் எழுதி முடித்து விட்டேன். பெண்கள் மலரில் வெளியானது. மகாபாரதத்தில் உள்ள குட்டிக் கதைகளை தொகுத்து எழுத வேண்டும், ராமாயணத்தில் உள்ள நமக்குத் தெரியாத எத்தனையோ கதாபாத்திரங்கள், அதாவது சீதை, ராமன், ராவணன் என்று நமக்கு நன்றாக அறிமுகமான பெயர்களைத் தவிர கதையின் போக்கில் கடந்து போகும் சிலரைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதேபோல் கோவில்களில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள், அங்கு பாடப்பட்ட பதிகம், அதைப் பாடுவதால் என்ன பலன் என்பதை பற்றியும் எழுதும் ஒரு

ஆசை. லலிதா சகஸ்ரநாமம், விஷ்ணு சகஸ்ர நாமத்தில் நாமம், அதற்கான கதை என்று இன்னும் ஏராளமான ஆசைகள் இருக்கிறது. இதற்கான வாய்ப்புகளை இந்த பிரபஞ்சம் தரும் என்று நம்புகிறேன்.

மிகச் சிறப்பான எழுத்துக்குச் சொந்தக்காரரான தாங்கள், இப்போது எழுதும் எழுத்தாளர்களுக்குச் சொல்ல விரும்புவது என்ன?

எனக்குச் சொன்ன அறிவுரைகளையேதான் நான் இப்போது எழுதும் எழுத்தாளர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நிறைய படியுங்கள். ஆபாச கலப்பில்லாமல் எழுதுங்கள். நல்ல விஷயங்களைச் சொல்லுங்கள், நெகட்டிவ்வான விஷயங்களை தவிர்த்து விடுங்கள். நம் கதையைப் படிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், செயல்பாடுகள், பாசிட்டிவான எண்ணங்களை உருவாக வேண்டும். ஏதோ ஒரு வகையில் சமூக நலனுக்கான விஷயங்கள், உறவுகளுக்கு மத்தியிலான பிணைப்புகள், அன்பு, பாசம், கருணை, பெற்றவர்களுக்கான மரியாதை, பெண்கள் ஜெயிப்பது, தாழ்வு மனப்பான்மையில் குறுகிப் போகாமல் தங்களை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் இந்த சமூகத்தையும் மேம்படுத்தக்கூடிய பெண்களைப் பற்றி எழுதுங்கள் என்பதுதான் நான் சொல்லக்கூடிய விஷயம்.

நீங்கள் எங்களைக் கவர்ந்த எழுத்தாளர், தங்களைக் கவர்ந்த, தாங்கள் மதிக்கும் எழுத்தாளர் இருந்தால் அவரைப் பற்றிச் சொல்லுங்களேன்.

ஜெயகாந்தன். இன்னமும் என்னை பிரமிக்க வைக்கும் எழுத்து அவருடையது. எந்தப் பகுதி மக்களைப் பற்றி எழுதினாலும், அந்த மொழியில் அவர்களின் வாழ்க்கைக்குள் நுழைந்து பார்ப்பது போல ஒவ்வொன்றையும் எழுதிய அவரைப்போல் எழுத வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அடுத்து தி. ஜானகிராமன், லா.சா.ரா. இவர்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். நான் மகான்கள் என்ற வரிசையில் இவர்களை வைத்திருக்கிறேன்.

திரு. லா.சா.ரா தன் எழுத்தின் மூலம் தெய்வீகத்தை பரப்பினார். தெய்வீக உணர்வுகளை, தான் அனுபவித்த ஆன்மீக விஷயங்களை பொய் கலப்பில்லாமல், இப்படி ஒரு வாழ்க்கை நமக்கு அமையாதா என்ற ஏக்கத்தையும் உண்டாக்கக்கூடிய அளவில் எழுதினார்.

எத்தனை முறை படித்தாலும் புதிதாகத் தோன்றும் எழுத்து அவருடையது. அதை அடுத்து பாலகுமாரன், லட்சுமி, அனுத்தமா, சூடாமணி இவர்களின் எழுத்துக்களை விரும்பிப் படிப்பது உண்டு. குடும்பக் கதைகள், அதில் நடக்கும் உணர்ச்சி போராட்டங்களை மிக அழகாக கூறுவார்கள். அந்த மாதிரியான குடும்ப அமைப்பை மேம்படுத்தும் விதமாக கதைகளை எழுத வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

உங்கள் எழுத்து வளர்ச்சிக்குக் காரணகர்த்தா என யாரைச் சொல்வீர்கள்?

என் அப்பா. படிப்பின் மீது ஆசை வர காரணமே அவர்தான். நான் முன்பே சொன்னது போல குவாட்டர்ஸில் அக்கம் பக்கம் சேர்ந்து பழக ஆட்கள் இருக்காது. அப்போதெல்லாம் எங்களுக்குத் துணை புத்தகங்கள்தான்.

லைப்ரரியிலிருந்து நான்கு, ஐந்து எனப் புத்தகங்களை எடுத்து வருவார். ஆறாவது படிக்கும்போதே எனக்கு ஜெயகாந்தன், லா.சா.ரா, தி. ஜானகிராமன் அறிமுகம். புரியலப்பா என்றால் திரும்பத்திரும்ப படி புரியும் என்பார். மொழிபெயர்ப்பு நாவல்கள், மேல்நாட்டு கதைகள், சரத் சந்திரர், தாகூரின் கதைகள், பாரதியார் கவிதைகள் என்று அனைத்தையும் எனக்கு அறிமுகப்படுத்தியது அப்பா தான்.

என்னுடைய முதல் கதை வந்த போது, மிகவும் மகிழ்ச்சி அடைந்து நாலைந்து பிரதிகள் வாங்கி அதை தன்னுடைய ஹாஸ்பிடல் முழுக்க விநியோகித்தார் அப்பா. ஒவ்வொரு கதை வரும்போதும் ‘உன் கத வந்து இருக்குப்பா’ என்று கூறி, இரண்டு புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்து விடுவார்.

அதேபோல் அம்மா. நிறைய கதைகளைப் படிக்கும்போது அதில் இருக்கும் ஏதேனும் ஒரு சம்பவம் உன்னைக் கவர்ந்தால் அதையே மாற்றி உன் பாணியில் எழுதிப் பழகு என்பார். நான் வெளியில் எங்கேயேனும் சென்றால், பத்திரமா போயிட்டு வா. மனிதர்களை கூர்ந்து கவனி. எல்லாரையும் நம்பு, ஆனால் யாரையும் நம்பாதே என்பார். அதற்கான அர்த்தம் எனக்கு பல நாட்கள் புரியாமல் இருந்தது. ஆனால் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு மனிதர்களையும் சந்திக்கும் போது அம்மாவின் வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது.

என்னுடைய கருத்துக் கருவூலம் அம்மாதான். நிறையப் படிப்பார்கள். தான் படித்தவற்றையெல்லாம் என்னிடம் சொல்வார்கள். தினசரிகளில் வரும் செய்திகளைச் சேர்த்து வைத்து, இதைப் பற்றி நீ எழுது என்பார். எந்த ஒரு விஷயத்திலும் எதிர்மறை கருத்துக்களைப் பரப்பாது, ஆபாசமாக எழுதாது இரு. இதை மட்டும் மனதில் வைத்துக்கொள் என்றார். அவர் கூறியதை பின்பற்றியே இப்போது நடக்கிறேன்.

என் சகோதரி (இப்போது இல்லை). கதையில் கனம் இல்லை. ஆழம் இல்லை என்று மீண்டும் மீண்டும் எழுதச் சொல்வார். இவர்களின் ஊக்குவிப்பே இவ்வளவு நீண்ட பயணத்திற்குக் காரணம்.

தாங்கள் நன்றி சொல்ல விரும்பினால் யாருக்குச் சொல்வீர்கள்? ஏன்?

நிச்சயமாக இந்தப் பிரபஞ்சத்திற்கு. நீ இப்படித்தான் என்று என்னை உருவாக்கி, எனக்கான பாதையையும் அமைத்துக் கொடுத்து, அதில் என்னை பத்திரமாக பயணிக்க வைக்கும் இந்தப் பிரபஞ்ச சக்திக்கு என்னுடைய நன்றிகள்.

இதில் உள்ள ஒவ்வொரு துகளையும் ஒவ்வொரு தெய்வங்களாக நாம் உருவாக்கி மகிழ்கிறோம். அதில் நான் உருவாக்கி மகிழும் என்னுடைய தெய்வங்கள் அனைத்திற்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதை அடுத்து என்னைப் பார்க்காமலேயே என்னுடைய கதைகளைப் படித்து, இன்று வரை எனக்கான வாய்ப்புகளைத் தரும் அனைத்து பத்திரிகை ஆசிரியர்களுக்கும் நான் நன்றி சொல்ல வேண்டியது அவசியம்.முக்கியமாக திரு சாவி சார்.

ஏதோ ஒரு கிராமத்தில் ஒரு நாலு சுவற்றுக்குள் அமர்ந்து நான் படித்ததை, நான் பார்த்த மனிதர்களைப் பற்றி, என் மனதிற்குள் தோன்றும் கருத்துக்களை கதையாக எழுதி அனுப்புகிறேன். அதை பாராட்டி பிரசுரித்து எனக்கு இன்று வரை வாய்ப்புகள் தரும் அனைத்து பத்திரிக்கை ஆசிரியர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி ஒரு வாழ்க்கையை எனக்கு அமைத்துத் தந்த தெய்வத்திற்கு நன்றி நன்றி என்று கூறிக் கொண்டே இருக்க விரும்புகிறேன்.

நிஸ்வாவின் நிழலில் - நீரோடைகளின் கதை!!!

இளங்கோ ராமசாமி

காலை ஒன்பது மணிக்கு அருங்காட்சியகத்திற்குள் நுழைந்த நீங்கள் மூன்று அல்லது நான்கு மணி நேரம் சுற்றியலைந்து களைத்த பின்பு உங்களை மதிய உணவிற்கு எங்களது பல்கலைக் கழகத்தின் எதிரே உள்ள “Arabian Hospitality Dinning Table Kitchen” என்ற ஒரு அருமையான உணவகத்திற்கு அழைத்துச் செல்வதே திட்டம். இதென்னடா ஹோட்டலுக்கு இப்படி ஒரு பெயரா என நீங்கள் வியந்து சிரிக்கக் கூடும். ஒரிரு வாரங்களுக்கு முன்பு இந்தியாவில் இருந்து வந்திருந்த ஒரு விருந்தினரை அழைத்துக் கொண்டு ‘மிஸ்ஃபாத் அல் அப்ரியீன்’ என்ற கிராமத்திற்குச் சென்று வந்தோம். வரும் வழியில் அவர்கள் ஆங்காங்கே இருக்கும் கடைகளின் பெயர்ப்பலகைகளைக் கண்டு வியந்தவாறே வந்தனர்.

ஒரு முறை யாரோ ஒரு நிருபர், நடிகர் கவுண்ட மணியின் வீட்டிற்கு சென்றிருந்திருக்கிறார். அங்கு அவருடைய வளர்ப்பு நாயைக் கண்டவர், கவுண்டரிடம் அதன் பெயரென்னவெனக் கேட்டாராம். அதற்கு கவுண்டர், “‘ நாய்க்கு ஒரு பேர வெச்சு அத வேற நான் ஞாவகம் வெச்சிக்கணுமாக்கும்?” அத “நாயே இங்க வான்னு கூப்புட்டா வந்துட்டுப் போகுது” எனச் சொல்லி அதிர வைத்திருக்கிறார்.

அது போல ஓமானில் உள்ள வியாபார நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் அது என்ன நிறுவனம் என்பது குறித்த விவரங்களை விளக்கமாகத் தாங்கி நிற்பது இயல்பு. உதாரணத்திற்கு காய்கனி அங்காடியெனில் Sale of Fruits and Vegetables என்ற பதாகை இருக்கும். அது போல Sale of food stuff, Sale of Building Materials, Sale of Ladies Tailoring Dress Materials என்ற பெயர்ப்பலகைகள் நீக்கமற நிறைத்திருக்கும். அதுவும் ஒரு சில வீதிகளில் தொடர்ந்து வரிசையாக அடுத்தடுத்த மகளிர் ஆடையகங்கள் இருப்பின் அனைத்திற்கும் ஒரே மாதிரியான பெயர்ப்பலகைகள் இருப்பது கூடுதல் ஆச்சரியமளிக்கும். சற்றே கூர்ந்து கவனித்தால் கடையின் பெயர் ஒரு மூலையில் சிறிய எழுத்துகளில் காணக் கிடைக்கலாம்.

சரி இப்பொழுது விஷயத்திற்கு வருவோம். பெயர் கோக்கு மாக்காக இருந்தாலும் மதிய உணவிற்கு மந்தி பிரியாணி சாப்பிட நிஸ்வாவில் சிறந்த உணவகம் எங்கள் பல்கலைக் கழகத்திற்கெதிரே இருப்பது தான். இது காபூலி, யெமேனி, சவுதி, ஈரானி மற்றும் ஓமானி அரிசி வகைகளில் நமக்குப் பிடித்ததைத் தேர்ந்தெடுத்து நல்ல சுவையான ஆடு, கோழி அல்லது மாட்டுக்கறியுடன் சேர்த்து நியாயமான விலையில் சுவைக்கச் சிறந்த இடம்.

நேற்று மதியம் கூட மஸ்கட்டில் இருந்து வந்த ஒரு நண்பர் சாப்பிடத் தோதான இடத்தைச் சுட்டச் சொல்ல நான் இந்த உணவகத்தைப் பரிந்துரைத்தேன். மாலை அழைத்து ஒரு நீண்ட புகழுரையை வாசித்தார்.
அதனால் அருங்காட்சிகத்தில் கால் நோக நடந்த களைப்புத் தீர அரேபியன் ஹாஸ்பிட்டாலிட்டி டைனிங் டேபிள் கிச்சன் உணவகத்தில் அமர்ந்து ஆற அமர அருமையான அரேபிய மந்தி உணவைச் சுவைத்த வாறே நான் ஓமானில் இன்றும் புழக்கத்தில் உள்ள ஈராயிரம் ஆண்டு புராதனமான ஃபலஜ் என்றழைக்கப் படும் நீரோடைகளின் வரலாற்றைக் கூறுகிறேன். வயிற்றிற்கீயப் படும் விருந்திற்குத் தக்க செவிக்கும் விருந்திடுவதே திட்டம்.

ஓமானின் கலாச்சாரப் பெருமைகளுள் ஒன்று இந்நிலத்தின் "அல் ஃபலஜ்" எனப்படும் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான நீர்ப்பாசன முறை. இன்று வரை சுமார் மூவாயிரத்திற்கும் சற்றதிகமான ஃபலஜ்கள் இங்கு பயன்பாட்டில் இருக்கின்றன. ஃபலஜ் (falej) என்றால் பல பகுதிகளாகப் பிரியும் என்று அர்த்தம். இதன் பன்மை அஃப்லஜ் (Aflaj). இதன் மூலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெர்சியர்களால் உருவாக்கப்பட்ட "கனாட்" (Qanat) என்ற புவி ஈர்ப்பு விசையைப் பயன்படுத்தி நீரைப் பங்கிட்டுக் கொள்ளும் நீர்ப்பாசன முறை.

இந்தக் கலாச்சாரப் பெருமையின் தலைமையகம் என மார்தட்டிக் கொள்ளும் தகுதி நிஸ்வாவிற்குண்டு. காரணம் ஓமானில் உள்ள ஐந்து UNESCO வின் அங்கீகாரம் பெற்ற புராதனத் தளங்களில் மூன்று நிஸ்வாவில் உள்ளன.

ஃபலஜ்ஜுகள் மூன்று வகைப்படும். அவற்றில் முதலாவதும் மிகவும் வியக்க வைக்கக் கூடியதுமான வகை வாய்க்கால்கள் தாவூதீ (Dawoodi) ஃபலஜ்கள் என்றழைக்கப்படுகின்றன. இந்த முறையில் நீரை சேகரித்துப் பாசனத்திற்குப் பயன்படுத்த மிகப் புத்திசாலித்தனமான மற்றும் துல்லியமானதொரு பொறியியல் கட்டமைப்புத் தேவை.

இதற்கு முதலில் நிலத்திற்கடியில் இருக்கும் பெரும் நீர் நிலை கண்டறியப் பட வேண்டும். பின்பு அதனை அடையும் வரை ஒரு ஆழமான கிணறு தோண்டப்பட வேண்டும். அதனையடுத்து அந்தக் கிணற்றின் அருகில் இருந்தே அதற்குச் சற்றுக் கீழாக ஒரு சுரங்கப் பாதை தோண்டப் பட வேண்டும். அப்பாதை அடுத்த ஒன்று அல்லது இரண்டு கிலோ மீட்டர்களுக்கு நீளும். ஆனால் அந்த 2000 அடி தூர நீளத்திலும் அதன் மட்டம் இரண்டு மீட்டர்கள் மட்டுமே கீழிறங்கி இருக்கும். அதாவது ஃபலஜ்ஜின் துவக்கப் புள்ளிக்கும் ஃபலஜ் பூமியினடியில் யிருந்து தரைப்பகுதியை அடையும் இடத்திற்கும் இடையேயான உயர வித்தியாசம் இரண்டு மீட்டர் மட்டுமே. இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இரண்டு மீட்டர் சரிவை மிகவும் சீரான இறக்கமாக வடிவமைத்து வாய்க்காலைக் கட்டமைப்பதில் தான் இந்தக் கட்டுமானப் பொறியாளர்களின் நிபுணத்துவம் இருக்கிறது.

இந்த ஃபலஜ்ஜுகள் தங்களது தாய்க்கிணற்றின் மட்டத்திற்குக் கீழிருந்து துவங்குவதாலும் சீராக இறங்கும்படி வடிவமைக்கப் பட்டிருப்பதாலும் வருடத்தில் 365 நாட்களும் இவற்றில் பூவியீர்ப்பு விசையின் காரணமாக நீர் சீரான வேகத்தில் ஓடிக்கொண்டே இருக்கும். நிலத்தடியில் இருந்து மேற்பரப்பிற்கு வந்து பாசனத்திற்காக ஓடும் நீரை பொதுக் குடிநீர் மற்றும் சுகாதாரம், வக்ஃப் வாரியச் சொத்துகள், பேரீட்சை போன்ற நிரந்தரப் பயிர்ப் பாசனம் மற்றும் குறுகிய காலப் பயிர்ப் பாசனம் என்ற நான்கு வகைப் பயன்பாடுகளுக்குப் பங்கு வைத்துப் பயன்படுத்துகின்றனர்.
இந்த ஃபலஜ்ஜுகளின் கட்டுமானத்திற்கும், பராமரிப்பிற்குமான முதலீடுகளில் தாங்கள் செலுத்திய பங்களிப்பிற்குத் தக்க ஒவ்வொரு அமைப்பிற்கும், குடும்பத்திற்கும் நீர் பங்கிடப் படுகிறது. இந்த நீரோட்டத்தின் அளவு வருடம் முழுவதும் ஒரே சீராக இருப்பதால் நேரத்தை மட்டும் துல்லியமாகக் கணக்கிட்டால் சரியான நீர்ப் பங்கீடு சாத்தியம். அதாவது

நீரின் அளவு = நீரோட்டம் x நேரம்
என்பது தான் அளவைக் கணக்கிடும் சூத்திரம்.

பண்டைய காலத்தில் காலத்தைக் கணக்கிட பகலில் சூரியக் கடிகாரத்தைப் பயன்படுத்தினர். வேள்பாரி நாவலில் போரைக் கண்காணிக்கும் திசைவேழர் பயன்படுத்தும் நாழிகைக் கோல்தான் சூரியக் கடிகாரம். இதற்கு அரபியில் லமாட் என்று பெயர். லமாட் (Lamad) என்றால் நீண்ட கோல் என்று பொருள்.

இரவில் காலத்தைக் கணக்கிட அவர்கள் பயன்படுத்திய கால மாணிக்கு டாஸா என்று பெயர். டாஸா என்பது ஒரு தாமிரப் பாத்திரம். இதன் மத்தியில் ஒரு மிகச் சிறிய துளை இடப் பட்டிருக்கும். அந்தப் பாத்திரத்தை ஒரு பெரிய நீர் நிரப்பப்பட்ட அண்டாவில் மிதக்க விடுவர். அந்தப் பாத்திரத்தில் நீர் நிறைந்து மூழ்க மிகச் சரியாக 30 நிமிடங்கள் பிடிக்கும்.

வேள்பாரியில் வரும் திசைவேழரைப் போலவே ஒவ்வொரு ஊரிலும் நேரத்தை அறிவிக்கும் அறம் வழுவாத 'ஆரிஃப்' என்ற ஒரு ஸ்ட்ரிக்ட் ஆஃபீசர் நியமிக்கப் பட்டிருப்பார். அவர் இரவு முழுவதும் கண் விழித்து ஒவ்வொரு 30 நிமிடத்திற்கும் நேரத்தை பெருங்குரலெடுத்து அறிவித்துக் கொண்டிருப்பார்.
இந்த பாசனம் 7 நாட்களுக்கு ஒரு முறை அல்லது 14 நாட்களுக்கு ஒரு முறை இரவிலிருந்து பகலுக்கோ அல்லது எதிர்மறையாகவோ மாறும். முப்பது நிமிட முறைக்கு அதார் (Athar) என்று பெயர். மூன்று மணி நேரத்தை ருபுவா (Rubu ' a) என்றும் பன்னிரெண்டு மணி நேர அரை நாள் முறையையை பத்தா (Baddah) வெனவும் இருபத்து நான்கு மணி நேரத்தை தவ்ரா (Dawra) என்றும் அழைக்கின்றனர். இதில் பத்தா என்ற அரை நாள் முறையை பகல் பத்தா (Day shift) மற்றும் இரவுப் பத்தா (Night Shift) எனப் பிரித்திருக்கின்றனர்.

நிஸ்வாவில் இருக்கும் தாவூதி ஃபலஜ்களில் ஏன் ஓமானில் உள்ள ஃபலஜ்களிலேயே மிகவும் புகழ் பெற்றது ஜபல் அக்தர் (Jabel Akthar) என்ற பச்சைமலையின் அடிவாரமான பிர்க்கத் அல் மௌஸில் இருக்கும் (Birkat Al Mouz) அல் கத்மைன் (Al Kathmainn) என்ற வாய்க்கால் தான். தரையின் ஆழத்தில் இருந்து நிலத்தின் மேற்பரப்போடு அந்தச் நீர்த்தாரைச் சுரங்கம் வந்து சேரும் இடத்தில் ஒரு கல்லால் கட்டப் பட்ட அல் யாரிபா என்ற பழங்கால மசூதி இருக்கிறது. இது ஓமானை கிபி 1624 முதல் 1744 ஆண்ட அல் யரூபிகளின் காலத்தில் கட்டப் பட்டிருக்கும் என நம்பப் படுகிறது.

கி.பி 1624 முதல் 1649 வரை ஓமானை ஆண்ட இமாம் நாசர் பின் முர்ஷித் அல் யரூபி பல்வேறு இனக்குழுக்களை ஒருங்கிணைத்து ஓமானின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த போர்த்துக் கீசியர்கள் மீது போர் தொடுத்தார். சொஹார் மற்றும் குரியத் போன்ற கடலோர நகரங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட போர்த்துக் கீசியர்களது ஓமானின் மீதான ஆதிக்கம் மஸ்கட் மற்றும் மத்ரா எனக் குறுக்கப்பட்டது. அவருக்கு அடுத்து முடிசூடிய வந்த இமாம் சுல்தான் பின் சைஃப் அல் யரூபி தான் 1949 ஆம் ஆண்டு இந்த யரூபி மசூதியைக் கட்டியிருக்கிறார்.

மிகச் சரியாக அந்த மசூதிக்கு முன்புறம் தான் அல் கத்மீன் என்ற ஓமானின் மிகப் புகழ்பெற்ற ஃபலக் நிலத்தின் அடியில் இந்த மேற்பரப்பிற்கு வந்து சேர்கிறது. நிலத்தடி சுரங்க நீர் மேற்பரப்பை அடைந்து வாய்க்காலாக மாறும் அந்த இடத்திற்கு ஷரியா என்று பெயர். இப்படி வெளியே வரும் நீர் மூன்று அல் கத்மீன் ஃபலஜில் கிளைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அப்படிப் பிரிக்கப் படும் இடத்தில் மூன்று பந்துகளை மிதக்கவிட்டால் அவை மூன்றும் மிகச் சரியாக மூன்று தனித்தனி வாய்க்கால்களைச் சென்றடையும் எனக் கூறுகின்றனர். இது மிகச் சரியான அளவில் நீர் பங்கிடப் படுகிறது என்பதை நிறுவ அவர்கள் பயன்படுத்திய தரக் கட்டுப்பாட்டு முறை.

17.5 மீட்டர் ஆழம் கொண்ட தாய்க் கிணற்றில் இருந்து ஷரியா உள்ள இடம் 2.45 கிலோ மீட்டர். இந்த நிலத்திற்கடியேயுள்ள சுரங்க நீர்த்தாரை தான் அல் கத்மீன் என்றழைக்கப் படுகிறது. மசூதிக்கு வரும் முன்பே இந்த நீர் பிர்கத் அல் மௌஸில் இருக்கும் கோட்டயின் பயன்பாட்டிற்குள் வந்து விடுகிறது. அங்கு வாழ்ந்த மக்களின் குடிநீர் ஆதாரம் இதுவே. அதன் பின்பு மூசூதியில் வழிபட வருபவர்கள் தங்கள் துணிமணிகளைத் துவைப்பதற்கும் உடலைச் சத்தம் செய்து கொள்வதற்கும் பயன்படுகிறது. அடுத்ததாகத் தான் அது பிர்கத் அல் மௌஸின் 72 ஏக்கர் பரப்பளவில் பரந்து கிடக்கும் சோலைகளின் நீர்ப்பாசனத்திற்குப் பிரிகிறது.

மதிய உணவிற்குப் பிறகு எங்களது பல்கலைக் கழக வளாகத்தில் இருந்து பதினைந்து நிமிடத் தொலைவில் இருக்கும் இந்த அல் கத்மீன் என்ற ஃபலஜ்ஜையும் அது பாயும் பிர்கத் அல் மௌஸ் என்ற சிற்றூரின் பசுமை போர்த்திய, மிகவும் ரம்யமான பேரீச்சை மரங்கள் அடர்த்த தோப்பையும் சுற்றிப் பார்ப்போம். அப்படியே காலாற அந்தத் தோப்பைச் சுற்றிப் பார்க்கும் போது ஓமானில் வேறெங்கும் காண

முடியாத ரோமப் பேரசில் கட்டப்பட்ட நீர்ப் பாலங்ககளப் போன்ற தலைக்கு மேலே கிட்டத்தட்ட 3 மீட்டர் உயரத்தில் கல்லால் கட்டப்பட்ட ஊரின் மதிற் சுவர் மீது ஓடும் செல்லும் ஒரு நீர்ப்பாலத்தைக் காணலாம். அதன் மீது ஏறி நடந்து கொண்டே இரு புறமும் பரந்து கிடக்கும் பசுமையான தோப்புக்களை ரசிக்கலாம். அந்த ஊரின் பழங்காலச் சிதிலங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு சற்றே கீழ்புறமாகப் பயணம் செய்து ஒரு சிறு குன்றின் மீதேறி உச்சியை அடைந்தால் பிர்கத் அல் மௌஸின் அழகு நமது பருந்துப் பார்வைக்குச் சிக்கும்.

அதனைச் சிறிது நேரம் ரசித்து விட்டு சூரியன் கீழிறங்கியவுடன் கிளம்பி 'நிஸ்வா' வில் இருந்து 'இப்ரி' செல்லும் சாலையின் இடது புறத்தில் இருக்கும் 'திம்ஸா' என்ற தொழிற் பேட்டைக்குச் செல்வோம். அங்குள்ள ஆஸ்ட்ரிச் பூங்கா நிஸ்வாவின் அடையாளங்களுள் ஒன்று. அந்தப் பூங்காவிற்குள் நுழைய பொதுமக்களுக்கு அனுமதி கிடையாது. அந்தப் பூங்காவின் நீண்ட கம்பி வேலிக்குப் பின் நெருப்புக் கோழிகள், வரிக்குதிரைகள், மான்கள் மற்றும் ஒட்டகங்கள் அலைந்து கொண்டிருப்பதை நம்மால் வெளியில் இருந்து ரசிக்க முடியும். அப்பரந்த பூங்காவைச் சுற்றிலும் பசுமையான புல் தரையும், நிழற் கூடங்களும் அமைக்கப் பட்டுள்ளன. பொதுமக்கள் குடும்பங்களாக வந்து அங்கு பாய்விரித்தமர்ந்து பொழுது போக்குவதைக் காண முடியும். அந்தப் பூங்கா ஒரு மிகப் பெரிய நிறுவனத்தின் பராமரிப்பில் இருக்கிறது. ஆனால் அந்த வளாகத்தினுள் நிகழ்வது குறித்தும் அது என்ன நிறுவனம் என்பது குறித்தும் எவருக்கும் எந்த விவரமும் தெரிவதில்லை. அந்த நிறுவனத்தின் மதிற் சுவர்களுக்குப் பின் ஏதோவொரு பெரும் ரகசியம் புதைந்து கிடக்கிறது. அந்த நிறுவன வாயிலில் Al Meshan என்ற தொரு அழகிய உணவகம் இருக்கிறது. அந்த உணவகத்தில் உங்களுக்கு இரவு உணவளித்து உங்களை மீண்டும் உங்கள் விடுதியில் கொண்டு போய் இறக்கி விடுகிறேன்.

நன்கு உறங்கி ஓய்வெடுத்தால் காலை 7 மணிக்கெல்லாம் காலை உணவை முடித்துக் கொண்டு அறையைக் காலி செய்து விட்டுக் கிளம்பலாம். அருகில் இருக்கும் ஃபலஜ் தாரிஸ் என்ற நிஸ்வாவின் புகழ் பெற்ற மற்றொரு UNESCO அங்கீகாரம் பெற்ற தாவூதி ஃபலஜைத் தரிசித்து விட்டு பிர்கத் அல் மௌஸை அடுத்திருக்கும் வாதி முஹைதீன் என்ற கணவாய்க்குள் உங்களை அழைத்துச் செல்கிறேன். அங்கு இருக்கும் அல் எய்னி (Al Aini) எனப்படும் இரண்டாவது வகை ஃபலஜைப் பற்றி விரிவாக அடுத்த விண்மீன் இதழில் விவரிக்கிறேன். ஐஸ்கட்டிகளை மிதக்கவிட்டதைப் போன்று குளிர்ந்தும், பளிங்கு போன்று தெளிந்தும் கிடக்கும் நீல நிற நீரோடையில் குறித்துக் குதியாட்டம் போட விரும்பினால் உங்கள் நீச்சல் உடைகளை எடுத்து வைத்துக் கொண்டு தயாராகக் காத்திருக்கவும். பூலோக சொர்க்கத்தைக் காட்டுகிறேன்.

தூப்புக்காரி

செ. இராசாராம்
முகவை

தூப்புக்காரி என்ற குமரி மாவட்ட வழக்குச் சொல்லுக்கு தூய்மைப் பணியாள் என்று அர்த்தம். இந்த நாவல் முழுவதும் மலம், கழிப்பறை, சாக்கடை, குப்பை என்று பயணித்தாலும் ஒரு முழுமையான மனிதம் பேசும் நாவலாக வந்துள்ளது. இந்த நாவலை எனக்குப் பரிந்துரைத்த எழுத்தாளர் பரிவை சே.குமார் அவர்களுக்கு மிக்க நன்றி!

நாவலின் தொடக்கம் கொஞ்சம் அதிகமாகவே மூக்கைப் பிடிக்க வைத்தாலும், அந்த நாற்றம் உருவாக காரணமே நாம்தானே என்ற குற்ற உணர்வினை ஓங்கி பொட்டில் அடித்தாற்போல மாரி சொல்லும்போது அவருடன் கை குலுக்கத் தோன்றுகிறது. ஆம்! மாரி இந்த நாவலில் வரும், தூய்மைப் பணியாளன், இந்த கதையின் நாயகனும் அவனே. இந்த நாவல் தலித்தியம், பெண்ணியம், சாதியம், மனிதம், காதல், பகுத்தறிவு, பிரிவு, மற்றும் பரிவு என்று அனைத்து களத்தையும் பேசுகிறது.

தன் மகள் பூவரசிக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க நினைக்கும் தாய் கனகம், அதற்காகவும் தனது வாழ்வாதரத்திற்காகவும் தூய்மைப் பணிக்குச் சென்று கொண்டிருக்கிறாள். காலமோ அவள் மகள் பூவரசியின் கையில் தூப்பு வேலையும், சுமக்க கவலையையும் சேர்த்துக் கொடுத்து விடுகிறது. அதற்கு காரணமே இந்த வன்மம் நிறைந்த சமூகமும், பந்தியில் சாப்பிட்டுக் கொண்டிருந்த கனகத்தையும், ரோஸ்லியையும் பாதியிலேயே எழுந்திருக்கச் சொல்லிய அவமானமும்தான்,

மனோவின் கையறுநிலையால் பூவரசியின் மீதான காதலையும், அவள் சுமந்து கொண்டிருக்கும் தன் குழந்தையையும் ஏற்றுக்கொள்ள முடியாத சூழலில் உருவாகிறது. அதே நேரத்தில் மனோவுக்கு வேறொரு பெண்ணுடன் திருமணமும் முடிந்து விடுகிறது. பூவரசியின் காதல் நிறைவேறாமல் போவதும், மகளின் கண்ணீரும் கனகத்தை தற்கொலைக்குத் தள்ளுகிறது. பூவரசிக்கு குழந்தையும் பிறக்கிறது.,

சுற்றியுள்ள சமூகத்தின் அவதூறுகளுக்கு இடையே, இன்றைய கால கட்டத்தில் கருத்தரிப்பு மையங்கள் மூலம் குழந்தைகள் பெற்றுக் கொள்வதைப் பெரும்பாலான ஆண்கள் விரும்புவதில்லை, ஆனால், மாரியின் செயல் போற்றுதலுக்குரியது, பூவரசியின் மீது கொண்ட காதலினால், அந்தக் குழந்தை மனோவுடையது என்று தெரிந்தும் தன் குழந்தையாக ஏற்றுக் கொள்ளும் இடம் அவனை உயர்த்திக் காட்டுகிறது.

இதுபோன்று இந்த நாவலில் மனதை நெகிழச் செய்யும் இடங்களும் சரி, இச்சமூகத்தின் மீது காட்டும் கோபத்தினால் அதன் தலையில் குட்டு வைக்கும் இடங்களும் சரி, மிகச் சிறப்பு.

மாரியும், ஒரு விபத்தில் இறந்தும் விடுகிறான், அவன் உயிருடன் இருந்த வரை, பூவரசி வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயமில்லை, ஆனால் இப்போது தன் குழந்தைக்காகவும், தனக்கு இருக்கும் கடனுக்காகவும் மீண்டும் தூப்புக்காரியாக மாறுகிறாள்.

தன்னுடைய துரதிஷ்டமான விதி தன்னுடன் இருந்தவர்களெல்லாம் தன்னை விட்டு பிரித்துக் கொண்டு போய்விடுகிறதே என்று மனக்குமுறலோடு குழந்தையும் கையுமாக தூப்பு வேலை செய்கிறாள். குழந்தைக்கும் சரியான உணவினை அவளால் கொடுக்க இயலாத சூழலில்தான் வாழ்க்கை நகர்கிறது. ஒரு இடத்தில் தாயின் தோளில் கிடக்கும் குழந்தை பசியில் அழுது தாயின் வியர்வையை சுவைத்துச் சப்பி அப்படியே உறங்கி விடுகிறது. இந்த இடத்தை வறுமையின் உச்சமாக எழுத்தாளர் காட்டியிருப்பது எந்த இலக்கியத்திற்கும் குறைவில்லாதது என்று சொல்லலாம்.

இதற்கிடையே தான் வேலை பார்க்கும் மருத்துவமனையில் மருத்துவரின் தோழி, தனக்கு குழந்தை இல்லை என்றும், ஏதாவது ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்கலாம் என்றும் கூற, அந்த மருத்துவர் பூவரசியிடம், அவளது வறுமை, வயது இவற்றை காரணம் காட்டி குழந்தையை தத்து கொடுக்க கேட்கிறாள். பூவரசிக்கும் பல யோசனைகள் அவள் கண்முன்னே வந்து போகிறது.

தூப்புக்காரி (நாவல்)
மலர்வதி
கிழக்குப் பதிப்பகம்
பக்கம் : 184
விலை ரூ. 225

சிறு வயதிலிருந்தே அவளுக்கு நன்றாகப் படித்து, தூப்பு வேலைக்கு, மலம், சாக்கடை இவற்றை அள்ளும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று மனதிற்குள் நிறைவேறாத ஆசை ஒன்று இருக்கும், அது அவளின் ஆசை மட்டுமின்றி மாரியின் ஆசையும் கூட. ஆனால் அந்த ஆசை நிறைவேறாமல் போனதால் தன் மகளைப் படிக்க வைத்து, அந்த இயந்திரத்தை எப்படியும் உண்டாக்கி விடவேண்டும் என்ற வைராக்கியத்தோடு வளர்க்கிறாள். இந்த சூழலில் தன் மகளைத் தத்துக் கொடுத்தால், அவளும் சந்தோசமாக இந்த தூப்புக்காரியின் மகள் என்ற அடையாளம் இல்லாமல் வாழலாம் என்று அதற்குச் சம்மதிக்கிறாள்.

மருத்துவரிடம் தன் விருப்பத்தைச் சொல்லவும், தன் தோழியை நாளை வரச் சொல்கிறேன் என்று மருத்துவரும் உறுதியளிக்கிறார். மறுநாள் அவர்கள் தாங்கள் தத்தெடுக்க இருக்கும் குழந்தைக்கு மினுமினுக்கும் புதிய ஆடை ஒன்றைக் கொண்டு வந்து, அது உடுத்தியிருந்த அழுக்கான ஆடையை கழற்றி பூவரசியிடம் கொடுத்து விட்டு புத்தாடையை அணிவிக்கிறார்கள். பழைய ஆடைகளையே அணிந்து பார்த்துப் பழக்கப்பட்ட தனது மகளுக்குப் புதிய ஆடை அணிவித்ததும் அவள் தேவதைபோல் காட்சி தருவதைப் பார்த்ததும், தன் மகள் பணக்கார வீட்டில் வாழப் போகிறாள். பட்டினியில்லா உணவும், படிப்பும் கிடைக்கப் போகிறது என்று மனதிற்குள் நினைத்து சந்தோசம் அடைகிறாள்.

கண்ணீருடன் தன் மகளை தாரை வார்த்துக் கொடுக்கும் வேளையில், இந்த வாழ்க்கையை என்னுடன் வாழ்ந்தால்தான் என் மகளுக்கு தன்னுடைய கஷ்டம், வறுமை, இந்த மக்களின் அவலம் புரியும், அதை அவள் உணர்ந்தால் மட்டுமே மலம், சாக்கடையை அள்ளும் இயந்திரத்தை அவளால் உருவாக்க முடியுமே ஒழிய, இந்த வலியையும், வாழ்க்கையையும் உணராத ஒருவரால் தர வாய்ப்பே இல்லை என நினைத்து குழந்தையை தர மறுக்கிறாள்.

மருத்துவரும் பூவரசியிடம் கோபத்துடன் வாதிட, கடைசியில் குழந்தையை தர முடியாது என பிடிவாதமாக கூறி நானே என் குழந்தையை வளர்க்கப் போகிறேன் என்று அந்த மினுமினுப்பான ஆடையைக் கழற்றி அங்கிருந்த வாகனத்தில் வைத்து விட்டு தன் மகள் ஏற்கனவே அணிந்திருந்த அழுக்கு ஆடையை உடுத்தி, தன் தோளில் வைத்துக் கொண்டு எனக்கான வாழ்வை நான் வாழ, மாரி நினைத்தது போல என் மகள் பெரிய ஆளாக மாற, இவளை நானே வளர்ப்பேன் என்ற வைராக்கியத்துடன் அவள் செல்வதாக இந்நாவல் நிறைவடைகிறது.

ஒரு சிறப்பான சமூக நாவல் வாசித்த திருப்தி, விளிம்புநிலை மனிதர்களின் வாழ்வியலை மறைவின்றி சமூகத்தின் முன்னால் வைத்து, இந்நாவல் சாகித்ய அகாடமியின் யுவபரஷ்ஹார் விருதினையும் பெற்றிருக்கிறது. அனைவரும் வாசிக்க வேண்டிய சமூக நாவல்!

மலடு

கலிங்கத்தைக்
கொன்றொழித்த அசோகன்
புத்தனான வரலாறு...

துருக்கியர்தம்
ஆர்மீனிய இன அழிப்பில்
அகமகிழ்ந்த நாட்கள்..

முள்ளிவாய்க்காலைக்
கொத்தோடு கொய்த
கொல்லிவாய்ப் பிசாசுகளுடன்
கைகுலுக்கிக் கொஞ்சிய காலம்..

ஹிட்லர் கொன்றொழித்த
யூதப்பிணங்கள்
கோரைப் பற்களுடன்
காசாவை வேட்டையாடுகின்றபோது,,,

'இணையென என்றுமே
இனம்சேரலாகாது'
ஆவணக் கொலைதின்னும்
மாண்ட சரித்திரங்கள்...

திரைக்கவர்ச்சி, கேளிக்கையில்
தன்னையே தொலைத்து...
தன்குஞ்சைத் தானே
தின்று மகிழும் பருந்து...

உணவுக்கு அழும்
உக்ரைன் மழலையர்....
கைகொட்டிச் சிரித்த
செயற்கைப் பஞ்சம்.. - என

உண்மையும் நேர்மையுமற்ற
உவரி மண்ணில்
விதையாய் வீழ்ந்தபடி
விழிக்கும் மனிதம்...

முகமூடி செழியன்

ஒரு மழைநாளும் தேவதையும்

முதுகுத் தண்டு சற்றே
வளைந்ததாய் உணர்கிறேன்
நிமிராத் தலை அடையாளமாகிறது

தெருமுனையில் நிற்கும்
துரத்தப்பட்ட நாயாய்
என் மனம் வாழ்க்கையைப்
பார்த்துக் கொண்டிருக்கிறது

எத்திக்கிலும் அவமானம்
அடியெல்லாம் அடியெனும் நிலையில்
நாடித்துடிப்பை நசுக்க எண்ணுகிறேன்

கால்போன போக்கை கட்டிப் போடுகிறது
கனத்துப் பெய்யும் மழை
மரத்தடியில் அண்டி
மரணத்திற்கு வழிதேடுகிறேன்

அருகிருந்த பாறையில்
அடிக்கடி இடியிடிக்க
மரம் விட்டு பாறைக்கு நகர்கிறேன்
கேட்டதும் எது தான்
கிடைக்கும் எனக்கு
இடியும் இடம் மாறியது
நிலத்தலையிலிருந்து
மொத்தமாய் வீழ்கிறது மரம்

"தோற்றகடித்துவிடுவாயா"
மரணத்திடம் வீராப்பு பேசுகிறேன்
ராத்திரி முழுதும்
அழுது தீர்க்கும் இம்மழை
அம்மாவைவேறு நினைவூட்டுகிறது

மழையோடு இருளும் அகல
மரணக்குழி தேடியெழுகிறேன்
விழுந்த மரத்தின்
பிளந்த வேர்களருகே
கொத்தாய் முளைத்திருக்கின்றன காளான்கள்

நாற்பதடி மரத்தை முட்டித்தள்ளி
தன் வாழ்வை தொடங்கியிருப்பதாய் காட்சி தந்த
காளான்களை நின்று திரும்பிப் பார்க்கிறேன்

வெண் தேவதைகளாய் அவை என் மனதினுள்
ஏதோ ஒன்றைக் கொன்று
ஏதோ ஒன்றை உயிர்ப்பித்துக்கொண்டிருந்தன!

புனிதா பார்த்திபன்

களம்காவல் (மலையாளம்)

பரிவை சே.குமார்

மம்முட்டி வில்லனாகவும் விநாயகன் கதாநாயகனாகவும் நடித்திருக்கும் படம் இது. கொலையாளி இவன்தான் என்பதை ஆரம்பக் காட்சியிலேயே காட்டிவிட்டு அதன் பிறகு அவனுக்கும் காவல்துறைக்கும் நடக்கும் ஆடுபுலி ஆட்டத்தை, படத்தின் இறுதிவரை பரபரப்பாய் நம் கண் முன்னே காட்சிகளாய் விரித்திருக்கிறார்கள்.

ஆசை வலை வீசி பெண்களைக் கவர்ந்து அவர்களுடன் உறவு வைத்துக் கொள்வதுடன் கொல்லவும் செய்யும் மனிதாபிமானமற்ற கொலைகாரனாக மம்முட்டி, ஆரம்பக் காட்சியில் தன்னுடன் இருக்கும் பெண் தொலைக்காட்சியில் வரும் கொலை தொடர்பான செய்தி குறித்துப் பேசும் போது மம்முட்டி சிகரெட்டை ஊதியபடி ஒரு உயிரைக் கொலை செய்வதில் அப்படி என்ன சுகம் இருக்கிறது என்பதை கண்கள் பிரகாசிக்கச் சொல்லிக் கொண்டே வருவார். அப்படிச் சொல்லும் போது மற்ற உயிர்களைக் கொல்வதை விட ஒரு மனிதனைக் கொல்வதில்தான் சுகம் அதிகம் என்று சொல்லியபடி அந்தப் பெண்ணைக் கொல்வார். அப்போதே இந்த மனிதனுக்குள் எவ்வளவு குரூரம் இருக்கிறது என்ற எண்ணத்தைப் பார்வையாளர்கள் மனதில் விதைத்து அதைப் படம் முழுவதும் கொஞ்சம் கூட குறையவிடாமல் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இது கர்நாடக மாநிலத்தை உலுக்கிய கொலையாளி சயனைடு மோகனின் கதையாம். அவன் பெண்களின் உடலுக்காக ஆசைப்பட்டு கடத்திக் கொல்லவில்லையாம், நகைக்காகவே கடத்திக் கொன்றானாம். இதில் உடலுக்காகவே கடத்திக் கொல்லப்படுகிறார்கள். அதுவும் முதிர்கன்னிகள், விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் போன்றோரை மட்டுமே தேடித்தேடி தன் வலையில் விழ வைத்து கழுத்தை இறுக்கி, சயனைடு கலந்த மாத்திரைகள் கொடுத்து, விஷ ஊசி போட்டு எனக் கொலைகளைத் தொடர்கிறார்.

இந்த வழக்கு விநாயகனின் கைக்கு வரும் போது பதிமூன்று பெண்களுக்கு மேல் கொல்லப்பட்டிருப்பார்கள். விசாரிக்கப் போகுமிடங்களில் எல்லாம் அவ ஒரு மாசம் முன்னாடி ஓடிப் பொயிட்டா, ஒரு வாரம் முன்னாடி ஓடிப்பொயிட்டா என்ற செய்திகள் மட்டுமே வரும். அந்தப் பெண்கள் இறந்த விவரம் கூட வீட்டாருக்குத் தெரிந்திருக்காது. பெண்களை மட்டுமில்லாமல் இவர்களால் தனக்குப் பிரச்சினை வரலாம் என்பதால் மனநோயாளி பிச்சைக்காரர் ஒருவரையும், சக போலீஸ்காரர் ஒருவரையும் கூட கொலை செய்திருப்பார்.

படத்தின் ஆரம்பத்திலேயே இவன்தான் வில்லன் எனக் காட்டி விடுவார்கள். இவனை எப்படி, எப்போது பிடிப்பார்கள் என்பதுதான் கதையாய் நகரும். போலீஸ் உடுப்பு இல்லாமல் சாதாரண உடையில் வரும் விநாயகன், போலீஸ்காரருக்கான மிடுக்கை தனது உடல்மொழி வழி அழகாகக் கடத்தியிருக்கிறார்.

படத்தின் கதைக்களம் நாகர்கோவில் மற்றும் கேரள எல்லைப் பகுதி என்பதாலும், காணாமல் போன தமிழகப் பெண்கள் கேரளாவில் கொல்லப்படுவதும், கேரளப் பெண்கள் தமிழகத்தில் கொல்லப்படுவதுமாய் மாறி மாறி நிகழ்வதால் இரு மாநில காவல்துறையும் சேர்ந்து கொலையாளியைத் தேட வேண்டிய சூழல். நாகர்கோவிலுக்கு வரும் விநாயகனுக்கு உதவியாய் ஒரு போலீஸ் ஆபீசரைக் கொடுக்கிறார்கள், அவர்தான் மம்முட்டி.

வில்லன் ஒரு பக்கம், போலீஸ் ஒரு பக்கம் எனப் பயணிக்கும் கதை ஒரு புள்ளியில் இருவரும் ஒன்றாக இணைந்து வில்லனைத் தேடுவதாய் மாறும் போது வேகம் கூடுகிறது. விநாயகனும் மம்முட்டியும் நரியும் புலியுமாக மாறி மாறிப் பயணிக்கிறார்கள். வழக்கு முடிந்தது என்று நினைக்கும் போது ரஜிஷாவால் மீண்டும் உயிர் பெற்று, கொலையாளியை நெருங்கி, அவனும் இப்போது உயிருடன் இல்லை என்பதாய் நகர்ந்து, இறுதிக் காட்சியில் விநாயகனின் பொறியில் மம்முட்டி மாட்டுவது வரை பரபரப்பு.

கதை நடப்பது 2005. சாதாரண செல்போன்கள் பயன்படுத்தப்பட்ட, சிசிடிவி கேமரா பரவலாக இல்லாத காலகட்டம் என்பதால் கொலையாளியை அவ்வளவு எளிதாய் நெருங்கிவிட முடியாது என்று காட்டியிருக்கிறார்கள். அழகான குடும்பம் இருந்தாலும் மம்முட்டிக்கு தான் தேர்வு செய்த பெண்ணுடன் உல்லாசமாக இருந்துவிட்டு, கொலை செய்வதில் அப்படி ஒரு ஆனந்தம். மனுசன் குரூரமாய் சிரித்தபடி, சிகரெட் புகையை வளையம் வளையமாக விட்டபடி தனது கதாபாத்திரத்தை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். விநாயகனும் அவர் கூடவே வரும் அந்த போலீஸ்காரரும் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

இந்தப் படத்தில் ஒரு சிறப்பு என்னவென்றால் இவன் கொலைகாரன், அவ்வளவுதான். எப்படி இப்படியானான்? இவன் இப்படி ஆனதற்கு காரணம் என்ன? என்றெல்லாம் பார்வையாளனிடம் சொல்லவில்லை. அவன் எதனாலோ இப்படி ஆகியிருக்கட்டும், இப்போது எப்படி இருக்கிறான் என்பதை மட்டும் பாருங்கள் போதும் என்பதாய் காட்டியிருப்பதுதான்.

மம்முட்டி ஏற்றிருக்கும் இந்தப் பாத்திரத்தை கமலால் கூட செய்ய முடியாது என்று பலரும், அதான் சிவப்பு ரோஜாவில் செய்துட்டாரே என்று சிலரும், அதுல கூட கமல் ஏன் இப்படி மாறினார் என்பதைச் சொல்லி அவரை நல்லவனாக்கிருவாங்க என்று சிலரும், மம்முட்டி மாதிரி வேடத்தை கமல் செய்யமாட்டார் என்று சிலரும் பக்கம் பக்கமாய் எழுதுகிறார்கள். இவன் இப்படித்தான் மாறினான்... இவர்களால்தான் மாறினான் என்ற காட்சி வைத்திருந்தாலும் கொலைகாரனாய் கமல் அந்த வயதிலேயே நடித்து இருக்கிறாரா இல்லையா..? கமலை அரசியல்வாதியாய் நமக்குப் பிடிக்கவில்லை என்பதால் ஒட்டு மொத்தமாய் அவருக்கு நடிக்கவே தெரியாதுன்னு சொல்வதையெல்லாம் நினைத்து சிரிக்கத்தான் வேண்டும். ஆனால் மம்முட்டி எப்படிக் கதாபாத்திரம் என்றாலும் மிகச் சிறப்பாக நடிப்பார், அதுவும் சமீபத்திய படங்களில் அவரின் கதாபாத்திரங்கள் எல்லாமே சிறப்பு.

படத்தில் முக்கியமான இடம் விநாயகனும் அவரின் மகளும் பேசும் இடம்தான். அந்தப் பேச்சுக்குப் பின்தான் விநாயகன் தீவிரமாக, சற்றே விசாரணையை மாற்றிக் கொலையாளியை நெருங்குகிறார்.

மம்முட்டியிடமிருந்து ரஜிஷா விஜயன் தப்பித்திருக்கிறார், அவர் தப்பித்த விவரம் கொலைகாரனுக்குத் தெரியாது. அவரைப் போலீஸ் கண்டடையும் போதே இவர் மூலமாக கொலையாளியை நெருங்கி விடுவார்கள் என்று நினைக்கும் போது கதை மாறி, மாறிப் பயணிப்பது சிறப்பு.

காயத்ரி அருண், ஸ்ருதி இராமச்சந்திரன், மாளவிகா மேனன் என நிறைய நாயகிகள் என்றாலும் எல்லாருமே கொஞ்ச நேரம் மட்டுமே வருகிறார்கள்.

மம்முட்டி கம்பெனி தயாரித்திருக்கும் இந்தப் படத்தின் மூலம் துல்கர் சல்மான் நடித்த 'குரூப்' படத்தின் திரைக்கதை எழுத்தாளர் ஜித்தின் கே ஜோஸ் இயக்கியிருக்கிறார். இசையமைப்பாளர் முஜீத் மஜீத்தின் பின்னணி இசையும் பாடல்களும், பிரவீன் பிரபாகரின் படத்தொகுப்பும், பைசல் அலியின் ஒளிப்பதிவும் படத்துக்குப் பெரும் பலம்.

இந்த வாரத்தில் 'த அய்ஸ் ஆப் மை மதர்'ங்கிற படத்தைப் பார்த்தேன். அதிலும் இப்படித்தான் அம்மாவின் கொலையைப் பார்த்த பெண், அப்பா, அம்மாவைக் கொன்றவன், பார்த்துப் பழகிய பெண், தனக்கு உதவி செய்த பெண் என எல்லோரையும் கொல்கிறாள். அவளும் கொலை செய்வதில் ஒரு ஆனந்தம் இருப்பதாகவே சொல்வாள். அப்போது எனக்கு களம்காவல்தான் ஞாபகத்துக்கு வந்தது.

மம்முட்டியின் நடிப்பு சிறப்பு என்றாலும் அவர் பெண்களை மயக்கும் விதங்களும், அவரின் வயதான தோற்றமும் கொஞ்சம் அலுப்பாகத்தான் இருக்கிறது. உடலைச் சிறப்பாக வைத்திருப்பார் என்றாலும் வயது முகத்தில் காட்டிக் கொடுக்கத்தான் செய்யும். எல்லோரும் புகழ்வது போல் 'ஆஹா... ஓஹோ... அடிபொலி...' என்றெல்லாம் சொல்ல முடியாது. அதற்காக படம் சுத்தமா நல்லாயில்லை என்றும் சொல்ல முடியாது.

மம்முட்டி + விநாயகனின் நடிப்பு மற்றும் பரபரப்பாக நகரும் கதைக்காக படத்தைப் பார்க்கலாம்.

YEAR-END SALE

30% OFF Dec 15, 2025 - Jan 1, 2026

& Many....

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

WhatsApp 9994434432